உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி உச] குரோதன ௵ மார்கழி௴ [பகுதி உ.
Vol. XXIV. December-January-1925-'26. No. 2.

இராஜராஜதேவருலா.

கௌடப்புலவனும் ஒட்டக்கூத்தன், திரிபுவனசக்கரவர்த்திகள் என்று பட்டந்தாங்கிய சோழசளுக்கியர்களில் விக்கிரமன், அவன் மகன் குலோத்துங்கன், அவன்மகன் இராஜராஜன் ஆகிய இம்மூவர் பேரிலும் உலாப் பாடினன். இதனை,—

"..............................செம்பதத்துக்
கூடிய சீர்தந்த வென்றெடுத்த கூத்தனுலாச்
சூடிய விக்கிரம சோழனும்—பாடிய
வெள்ளைக் கலியுலா மாலையோடு மீண்டுமவன்
பிள்ளைத் தமிழ்மாலை பெற்றோனுந்—தெள்ளித்தம்
முன்னு யகரிலவன் மூதுலாக் கண்ணிதோறும்
பொன்னு யிரஞ்சொரிந்த பூபதியும்—என்னுமிவர்
மாசக்ர மேரு வலஞ்சென் மகரசல ....
பூசக்ர மேழும் புரந்ததற்பின்—"

என்ற சங்கரசோழனுலாக் கண்ணிகளால் (உச—உஎ) அறிகின்றோம். இவ்வுலாமூன்றும் மூவருலாவெனவும் வழங்கப்படும்.

இவற்றுள், "சீர்தந்த தாமரையாள் கேள்வன்" என்ற முதற் குறிப்புடையது விக்கிரமசோழனுலா. இது, நமது மதுரைத்தமிழ்ச் சங்கத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. "தேர்மேவு பாய்புரவிப்

பாசடைச் செங்கமலம்" என்ற முதற்குறிப்புடையது குலோத்துங்க சோழதேவருலா. "புயல்வண்ணன் பொற்பதுமப் போதிற் புவநச், செயல்" என்ற தொடக்கமுடையதாய்ச் செல்வது இராஜராஜ தேவருலா.

இவ்விராஜராஜதேவருலாவாகக் கருதி, திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால், செந்தமிழ் இருபத்துமூன்றாந்தொகுதியின் 10–11-ம் பகுதிகளில் ஒருலா வெளியிடப்பட்டுள்ளது. அதைப் படித்துவரும்போது இடையிடையே நேர்ந்த சிலமுட்டுப்பாடுகாரணமாக என்னிடமுள்ள இராஜராஜனுலாப் பிரதியோடு ஒப்புநோக்கியதில் இவ் வுலாவைப்பற்றி யானறிந்த சில விஷயங்கள் கீழே காட்டப்படுகின்றன.

உலாவிலே தொடக்கத்திற் பாட்டுடைத்தலைவனது முன்னோர் பெயரும் அவர்புகழும், பாட்டுடைத்தலைவனது அரிய பெரிய வீரச் செயல்களும், புகழும் அவனது இயற்பெயரும் சிறப்புப்பெயர் முதலியன வும் செவ்வனே விளக்கப்பட்டிருக்கும். இதனை,

"...உடலை
யிறக்கி வடவரையே யெல்லையாத் தொல்லை
மறக்கலியுஞ் சுங்கமு மாற்றி—யறத்திகிரி
வாரித் திகிரி வலமாக வந்தளிக்கு
மாரிற் பொலிதோ ளபயற்குப்—பார்விளங்கத்
தோன்றியகோன் விக்கிரமசோழன்" (கண்ணி—உசு-உஅ)

என்று விக்கிரமசோழனுலாவிலும்,

"...காசினிக்கே
பைத்த பொருபுலியைப் பல்கோடி வேந்தணிய
வைத்த குமார மகீதரற்கு—மெய்த்துணையாத்
தோற்றிய சங்கர ராசன்" (கண்ணி—உஎ-உஅ)

என்று சங்கரசோழனுலாவிலும் வருவதால் அறியலாம்.

இப்போது வெளியிடப்பட்டுள்ள இராஜராஜதேவருலாவிலே பாட்டுடைத்தலைவனாகிய இராஜராஜன்முன்னோர்களில் இராஜராஜன்

பாட்டனன விக்கிரமன்வரை முத லிருபத்தெட்டுக்கண்ணிகளாற் கூறி யிருப்பினும், விக்கிரமனையடுத்து அவன்மகனும் இவ்விராஜராஜனுக்குத் தகப்பனுமான குலோத்துங்கன்பெயரும் இவ்விராஜராஜன்பெயரும் காணப்படவில்லை. பாட்டுடைத்தலைவனுகிய இராஜராஜன்பெயர், இவ் வுலாவின் றொடக்கத்துப் பரம்பரைகூறுமிடத்துமட்டுமன்றி, இவ்வுலா முழுவதிலும் ஓரிடத்தேனும் வெளிப்படையாகக் கூறப்படவு மில்லை.

மேலும், இவ்வெளிவந்த உலாவில் 32-ம் கண்ணியுடன் 33-ம் கண்ணி முதலியன பொருட்டொடர்பின்றி நிற்கின்றன.

என்னிடமுள்ள இவ்விராஜராஜனுலாக் கையெழுத்துப்பிரதி, 1 முதல் 32-ம் கண்ணிவரை இவ் வச்சுப்பிரதியோடு ஒத்தும், 33-ம் கண்ணிமுதல் உலாமுழுதும் ஒவ்வாது வேறுபட்டும் காணப்படு கின்றன. வேறுபட்டவற்றுள் இங்கு வேண்டுமளவு சில கண்ணிகள் காட்டப்படுகின்றன:—

32. "...
வரயிற் றிருச்சுற்று மாளிகையுந்—தூயசெம்

33. பொன்னிற் குயிற்றிப் புறம்பிற் குறும்பறுத்து
முன்னிற் கடல்களுண் மூழ்குவித்த—சென்னி

34, திருமகன் சீரராசராசன்"

என்னும் இவற்றுள், "மாளிகையும்... மூழ்குவித்த சென்னி" என விக்கிரமனுக்குப்பின் அவன்மகன் குலோத்துங்கனும், "மூழ்குவித்தசென்னிதிருமகன் சீராஜராஜன்" எனக் குலோத்துங்கனுக்குப்பின் அவனுக்கு மகனும் இப்பாட்டுடைத் தலைவனுமாகிய ராஜராஜனும் கூறப்பட்டிருத்தல் காண்க.

இங்கு, குலோத்துங்கனைச் சோழர்குடிப் பொதுப்பெயராகிய *சென்னி என்பதனாற் கூறினரேனும், 30, 31, 32, 33-ம் கண்ணிகளிற்

* சென்னியென்பது குலோத்துங்கன்பெயர்களுள் ஒன்றென்பர் ஸேது ஸம்ஸ்தான மஹாவித்வான் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்கள்; செந்தமிழ்த் தொகுதி ரு பக்கம் ௨௬அ.

கூறப்பட்ட திருப்பணி முதலியவற்றைச் செய்தவன் இக்குலோத்துங்கனே யென்பது சரித்திர ஆராய்ச்சியாளராலும் சாஸன ஆராய்ச்சியாளராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமாம். இவன் சிதம்பரத்திற்செய்த திருப்பணி கல்வெட்டுக்களாலும் அறியக்கிடக்கின்றது. அன்றியும், குலோத்துங்கசோழன், தில்லைத்திருமன்றத்தின்முன்னிருந்த கோவிந்தராஜப்பெருமானை ஆழ்ந்த சிவபத்தியாற் களைந்தெடுத்துக் கடலிலிட்டானென்று, முன்பு செந்தமிழ்ப்பத்திராசிரியராயிருந்த ஸேதுஸம்ஸ்தான மஹாவித்வான் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்கள் செந்தமிழில் (தொகுதி-ரு, பக்கம்-ருoக, ருருஉ) வெளியிட்டுள்ளார்கள். இதனைக் குருபரம்பராப்ரபாவமும் நன்கு வலியுறுத்தும். இப்பொழுது சென்னைப் பல்கலைக்கழகத்திற் சரித்திரப்போசிரியராயிருக்கும் ஸ்ரீமான் ராவ்ஸாஹிப் டாக்டர் S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்களும் தமது பண்டை இந்தியா (Ancient India) என்னும் புத்தகத்தில் He has been celebrated by his tutor and court poet, Ottakuthan, in more than one poem, of his. It is in this author's **Kulothunga Cholan Ula** and Thakkyagapparani that the fact is mentioned with some little elation, that the Vishnu Shrine at Chidambaram was removed and the image thrown into the sea. It was this image that was taken over by Ramanuja and established at Tirupati* (Page 153) என்று எழுதுகிறார்கள். இந்தச்செய்திதான், "புறம்பிற் குறும்பறுத்து முன்னிற் கடல்களின் மூழ்குவித்த-சென்னி" என்ற அடிகளாற் குறிக்கப்பட்டது. இச் செய்தியே, குலோத்துங்கசோழனுலாவிலும், "தில்லைத் திருமன்றின் முன்றிற் சிறுதெய்வத் தொல்லைக் குறும்பு தொகுத்தெடுத்து" என்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வடிகள் அச்சிடப்பட்ட

---

* இதன் தமிழ் மொழிபெயர்ப்பு வருமாறு:—"குலோத்துங்கன், தனது ஆசிரியரும் ஸமஸ்தானப்புலவருமான ஒட்டக்கூத்தரால் ஒன்றற்கதிகமான நூல்களிற் புகழப்படுகிறான். இக்கூத்தரியற்றிய குலோத்துங்கசோழனுலா, தக்கயாகப்பரணி என்பவற்றிற் சிதம்பரத்திலிருந்த பெருமாள்கோயில் எடுபட்டு, அம்மூர்த்தி கடலில் எறியப்பட்டது என்று சற்று மகிழ்ச்சியோடு சொல்லப்படுகிறது. இம்மூர்த்தியே பின் ஸ்ரீராமாநுஜரால் திருப்பதியில் ஸ்தாபிக்கப்பட்டது."

இவ்வுலாவிலே 39-ம் கண்ணியிற் காணப்படினும், குலோத்துங்கசோழனுலாவிலே 41-ம் கண்ணியிற் காணப்படுகின்றன.

[இரண்டாவது மூன்ருவது கண்ணிகள் எழுதப்படாத சில குலோத்துங்கசோழனுலா ஏட்டுப்பிரதிகளில் இவ்வடிகள் 39-ம் கண்ணியாகக் காணப்படுவதும் உண்டு].

ஆதலால் இப்பொழுது இராஜராஜதேவருலாவாக வெளியிடப்பட்டிருப்பதில் 32-ம்கண்ணிக்குப்பின் காணப்படுவனவெல்லாம் இராஜராஜதேவருலாக்கண்ணிகளன்றென்று துணியக்கிடக்கின்றது.

ஆயின் ஷ 32-ம் கண்ணிக்குப்பின் காணப்படுவனவெல்லாம் எவ்வுலாவைச் சேர்ந்தவையெனிற் கூறுவன். இவ்வச்சிட்ட உலாவிலேயே.—

"தொக்க கவிகைக் குலோத்துங்க சோழனை" (கண்ணி-129)

"நிருபகுல துங்கன் புகழ்நிலா" (கண்ணி-174)

"கோலத்தார் மௌலிக் குலோத்துங்க சோழற்கு" (கண்ணி.199)

என்று குலோத்துங்கன்பெயர் காணப்படுவதால் அவை குலோத்துங்க சோழனுலாவைச் சேர்ந்தவையென்றும், அவற்றுள், இடையே 225 முதல் 240 வரையுள்ள கண்ணிகள் விக்கிரமசோழனுலாவிற் பொருட்டொடர்புடையனவாகவும் இங்கே பொருட்டொடர்பில்லனவாகவும் காணப்படுவதால் அவை விக்கிரமசோழனுலாவிலிருந்து இவ்வுலாவில் இடைச்செருகலாக வந்து நுழைந்தவையென்றும் புலனும். இறுதியிலுள்ள வெண்பா இராஜராஜனுலா இறுதியிற் காணப்படுவதென்பது எல்லாரும் அறிந்ததே.

மேலும், இராஜராஜனுலாவாக இப்பொழுது வெளிவந்ததில், "முறைவிட்ட வேற்று முடிமன்னர்" என்ற முதற்குறிப்புடன்வரும் 33-ம் கண்ணியோடு குலோத்துங்கசோழனுலாவின் முற்பகுதி பொருட்டொடர்புடையதாயிருத்தலும் இங்கு அறியத்தகும். அம்முற்பகுதி ஏட்டுச்சுவடியிலுள்ளபடி வருமாறு:—

1 "தேர்மேவு பாய்புரவிப் பாசடைச் செங்கமலம்
போர்மேவு பாற்கடற் பூத்தனபோற்—பார்மேவு

2 *பூமகள் கேள்வன் புயல்வண்ண னுந்தியில்
நாமகள் கேள்வனு நான்முகனுங்—கோமகனு

3 யாங்கவற்குக் காசி பனுமவன்·பின்னவனு
மாங்கதற்பின் னுதித்த னின்னருளா—லோங்கி

4 மருளும் பசுவொன்றின் மம்மர் நோய்தீர
வுருளுந் திருத்தே ருரவோன்— அருளினுற்

5 பேராப் பகைபோற் பிறவேந்த ரெல்லோரு
மூராக் [1]குலிச விடையூர்ந்தோன்—சோருங்

6 துயில்காத் தரமகளிர் சோர்குழைகாத் தும்பர்
எயில்காத்த நேமி [2]யிறையோன்—வெயில்காட்டும்

7 [3]அவ்வா னவர்கோ னொருமடங்க லாசனத்தி
லொவ்வாம லொக்க வுடனிருந்தோன்—கௌவை

8 யெழக்குரைக்கும் பேழ்வா யிருங்கூற்றுக் கேற
வழக்குரைத்த கிள்ளி வளவன்—பழக்கத்தாற்

9 போந்த புலியுடனே புல்வா யொருதுறைநீர்
மாந்த வுலகாண்ட மாந்தாதா—காந்தெரியில்

10 வெந்தா ருயிர்பெற் றுடல்பெற்று விண்ணுள
மந்தா கினிகொணர்ந்த [5]மன்னர்கோன்—மூன்று

11 பொருதேர்க ளீரைந்தி னீரைவர் போர்பண்
டொருதேரால் வென்ற [6]வுரவோன்—கருதி

---

*இரண்டு மூன்றும் கண்ணிகள் பல பிரதிகளிற் காணப்படமாட்டா.

[1]புரஞ்செயன் (கலி-பரணி-175). [2]முசுகுந்தன் (கலி-பரணி-176). [3]இவ்வாறிருந்தோர் பலராதலின் இன்னுரென்று ஒருவரைத் திட்டமாகக்குறிப்பதற்கில்லை. [4](விக்-உலா. 7. கலி-ப-179). [5]பகீரதன் (கன்னியாகுமரிக்கல்வெட்டு சுலோகம் 21.) [6]தெசரதன் (கம்பராமா-அயோத்தி 19. "பஞ்சிமென் றளிரடிப் பாவை கோல்கொள-வெஞ்சினத் தவுணர்தேர் பத்தும் வென்றுளேற்கு").

12 மலைபத்தும் வெட்டு முருமின் மறவோன்
தலைபத்தும் வெட்டுஞ் [1]சரத்தோன்—நிலைதப்பா

13 மீளி தலைகொண்ட தண்டத்தால் மீளிக்குக்
கூளி தலைபண்டு [2]கொண்டகோன்—நாளும்

14 பதுமக் கடவுள் [3]புடைப்படையக் காத்த
முதுமக்கட் சாடி [4]முதலோன்—பொதுமக்கள்

15 வாங்கெயி னேமி வரையாக மண்ணாண்டு
தூங்கெயில் கொண்ட [5]சுடர்வாளோன்—ஓங்கிய

16 மால்கடற் பள்ளி வறிதாக மண்காத்து
மேல்கடல் கீழ்கடற்கு [6]விட்டகோன்—கோல்கொள்

17 தலையெறியுங் காவிரி யாற்றுப் படைக்கு
மலையெறியு மன்னர்க்கு மன்னன்—நிலையறியாத்

18 தொல்லார் கலிவலயத் தோள்வலய மூன்றிருந்த
வில்லா னடுவுள்ள [7]வெற்பெடுத்தோன்—ஒல்லைக்

19 கொலையே றுடம்படையக் கொய்தாலு மெய்தாத்
துலையேறி வீற்றிருந்த [8]சோழன்—தலையேறு

20 மண்கொண்டு பொன்னிக் கரைகட்ட வாராதான்
கண்கொண்ட சென்னி கரிகாலன்—எண்கொள்

21 பணம்புணர்ந்த மௌலியான் கோமகளைப் பண்டு
மணம்புணர்ந்த கிள்ளி வளவன்—அணங்கு

22 படுத்தும் பொறியனைய பொய்கைக்குப் பண்டு
கொடுத்துக் களவழிப்பாக் [9]கொண்டோன்—அடுத்தடுத்துச்

---

[1]இராமன். [2]சுரகுரு (இதன் விரிவை கலி-பரணி 144—148ல் காண்க). [3]படைப்புடையக்; பி-ம். [4]மிருத்யுஜித் (கன்; கல். சு-38. ஆனைமங்கலத்து(லெய்டன்) செப்பேடு. [5]தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன்;(புறம்-39;சிறுபாண்-அடி-79-82;பழமொழி-49; சிலப்-27. 164-165; கலிங்.பர.181). [6]சமுத்திரஜித் (கன். கல். சு—43; விக். உலா—9; ராஜராஜனுலா—14;சங்கரசோழனுலா—7). [7]இவன் யாரென்று தெரியவில்லை. [8]சிபி. [9]செங்கணான்.

23 சீறுஞ் செருவிற் றிருமார்பு தொண்ணூறு
மாறும் படுதழும்பி [1]னாத்தோன் — வேறு

24 பிரம வரக்கன்.............................பொன்னாற்
பரமர் திருத்தில்லை [2]பார்த்தோன் — நரபதியர்

25 தாழமுன் சென்று மதுரைத் தமிழ்ப்பதியு
மீழமுங் கொண்ட [3]இகலாளி — சூழவும்

26 ஏறிப் பகலொன்றி லெச்சுரமும் போயுதகை
நூறித்தன் றூதனை [4]நோக்கினான் — வேறுகக்

27 கங்காநதியுங் கடாரமுங் கைவரச்
சிங்கா தனத்திருந்த [5]செம்பியர்கோன் — எங்கோன்

28 புவிராச ராசர் மனுமுதலோர் போனார்
தவிராத சுங்கந் [6]தவிர்த்தோன் — கவிராசர்

29 போற்றும் பெரியோ ரிவர்பின்பு பூதலங்கள்
ஆற்றுந் திருத்தோ [7]ளகளங்கன் — வேற்றோர்

30 விரும்பாணி வெங்களத்தீ வேட்டுக் கலிங்கப்
பெரும்பாணி கொண்ட [7]பெருமாள் — தரும்புதல்வன்

31 கொற்றக் குலோத்துங்க சோழன் குவலயங்கள்
முற்றப் புரக்கு முகில்வண்ணன் — பொற்றுவரை

32 யிந்து மரபின் றிருக்குலத்தி லுதித்து?
வந்து மனுகுலத்தை வாழ்வித்த — பைந்தளிர்க்கை

33 மாதர் பிடிபெற்ற வாரணமவ் வாரணத்தின்
காதற் பெயரன் [8]கனகனவன் — யாதானுங்

---

[1]விஜயாலயன் (விக். உலா. 15; சங்கர. உலா. 15; ராஜராஜனுலா. 19). [2]ஆதித்தன் (பெரியபுராணம்). [3]பராந்தகன் (கல்வெட்டுகள்). [4]இராசராசன் (கலிங்.பரணி. 186). [5]இராசேந்திர சோழதேவன் (கலிங்.பரணி. 189). [6]முதற்குலோத்துங்கன். [7]விக்கிரமசோழன். [8]கீழைச் சளுக்கிய வங்கிசத்திற் பிறந்து சூரியவங்கிசத்தை நிலைநாட்டியவன் பேரன்.

34 தீட்டற் கரிய திருவே—திருமாலை
சூட்டத் திருமகுடஞ் சூட்டியபின்—நாட்டு
35 முறைவிட்ட வேற்று முடிமன்னர் தத்தஞ்
சிறைவிட் டரசருளிச் செய்து"

எனப் பிற்பகுதியுடன் பொருட்டொடர்புடையதாய் வருதல் காண்க.

இதுகாறுங்கூறியவாற்றால், மூவருலாக்களும் முறைதவறிக் கலந்து இராஜராஜதேவருலா என்று பெயர்கொண்ட ஓரேட்டுச்சுவடியைப் பார்த்து எழுதிய பிரதியைக்கொண்டு இப்பொழுது இவ்விராஜராஜனுலா வெளியிடப்பட்டதென் றேற்படுகிறது. இவ்வாறு பிறழ்ந்த பிரதியொன்று சென்னைமாநகரிலே யுண்டென்று என் நண்பர் காலஞ்சென்ற திரு. செல்வக்கேசவராயமுதலியாரவர்கள்சொல்லக் கேட்டதுண்டு. அது போன்றதேபோலும் இதுவும்.

இனி, அநுபந்தத்தில் இராஜராஜனுக்குப் 'புயல்வாய்த்து வளம் பெருக' என்று ஒரு மெய்க்கீர்த்தியுண்டென்று காணப்படுகிறது. அம் மெய்க்கீர்த்தி மூன்றாங்குலோத்துங்கனுடையதாகும். அது வருமாறு:—

"புயல்வாய்க்க வளம்பெருகப் பொய்யாத [1]நான்மறையின்
செயல்வாய்ப்பத் திருமகளும் செயமகளும் சிறந்துவாழ
வெண்மதிபோற் குடைவிளங்க வேல்வேந்த ரடிவணங்க
மண்மடந்தை மனமகிழ மனுவினெறி தழைத்தோங்கச்
சக்கரமுஞ் செங்கோலுந் திக்கனைத்துஞ் செலநடக்கக்
கற்பகாலம் புவிகாப்பப் பொற்பமைந்த [2]முடிசூடி
விக்கிரம பாண்டியன் வேண்டிவிட்ட தண்டால்
வீர பாண்டியன் மகன்பட வேழகம்
படமறப் படைபடச் சிங்களப் படைமூக்
கறுப்புண் டலைகடல் புகவீர பாண்டியனை
முதுகி டும்படி தாக்கி மதுரையும்
அரசுங் கொண்டு சயத்தம்ப நட்டு
அம்மதுரையு மரசுநாடு மடைந்தபாண்டியற் களித்தருளி
மெய்ம்மலர்ந்த வீரக்கொடியுடன் தியாகக் கொடியெடுத்துச்

[1] மாமறையின். [2] முடிபுனைந்து சேல்பிடித்த விக்கிரமபாண்டியன்

செம்பொன் வீர சிங்கா தனத்துப்
புவனமுழு துடையாளொடும் வீற்றிருந் தருளிய
கோப்பரகேசரிவன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள்
ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு:—

இம் மெய்க்கீர்த்தியையுடைய கல்வெட்டுக்கள், திருவாரூர், திருவையாறு முதலான இடங்களி லுண்டு. இம்மெய்க்கீர்த்தி மூன்றாங்குலோத்துங்கனுடையதாகவே ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்களாலும் செந்தமிழ் 23-ம் தொகுதியில் ஆறும்பகுதியுள் வெளிவந்த பெருந்தொகையின் கஅரு-ம்பக்கத்துக் காட்டப்பட்டுள்ளது.

திருவாரூர்—இலக்கணவிளக்க பரம்பரை
சோமசுந்தரதேசிகர்.

ஸ்ரீ:

ஒரு சிறப்புப்பட்டம்.

நம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வித்யாவிஷய ஆலோசனைஸபையங்கத்தவருள் ஒருவரும், நீண்டநாளாக நம் செந்தமிழில் இனியபொருளுரைகளை வெளியிட்டுவருபவரும், அகலிகைவெண்பா முதலிய பல நூல்களின் ஆசிரியரும், கவர்ண்மெண்டு ஸிவில் வெட்டரினரி இலாகா ரிட்டயர்டு டிப்டிசூபரிண்டெண்டுமான் திருவாளர் வே. ப. சுப்பிரமணிய முதலியாரவர்களை நம் செந்தமிழ்நேயரெல்லாம் நன்கறிவர். நாளிது 1926-ம் வருடப்பிறப்புக்கொண்டாட்டத்தில் நம் ராஜாங்கத்தார், முதலியாரவர்களின் ஒப்புரவுடைமைமுதலிய பெருந்தகைமையைப் பாராட்டி, அதற்கு அறிகுறியாக முதலியாரவர்களுக்கு ராவ்ஸாஹிப்பட்டம் வழங்கியிருப்பது தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியைத்தரத்தக்கது. இவர்கள் இன்னும் உலகநன்மைபுரிந்து சிரஞ்சீவியாய்வாழ எல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரிக.

தசரதன்குறையும் கைகேயிநிறையும்.

[கஅ-ம் பக்கத்தொடர்ச்சி]

பகுதி—௩: வால்மீகர் 'சுல்க'வரலாறு.

முதலில் மேற்குறித்த,

> "'வபனில் உந்தைசொன் மாபினுல் உடைத்
> தரணி நின்னதென் றியைந்த தன்மைபால்,
> உரனில் நீபிறந் துரிமை யாதலால்,
> அரசு நின்னதே; ஆள்க' என்றனன்."

என்ற கிளைகண்டுநீங்குபடலக் கவிக்கு நேரான வான்மீகி, அயோத்தியா காண்டம், 107-வது சர்க்கம், 3-வது சுலோகத்தைச் சிந்திப்போம்: "உடன்பிறந்தவனே! முற்காலத்தில் உனது தாயாரை நமது பிதா விவாகம்செய்துகொள்ளும்பொழுது, உனது பாட்டனுர் (கேகயர்) இடம் (அவர் பெண்வயிற்றுப்பேரனுக்காமாறு) தனது ராஜ்யத்தைக் கன்யா சுல்கமாகப் பிரதிஜ்ஞைசெய்து கொடுத்தார்," என்று இந்தச் சுலோகத்தை மொழிபெயர்த்துரைப்பவர் தமிழில் தருகின்றனர். சொற்கள் சிலவற்றை எவ்வாறு மாற்றிக் கூட்டிக் குறைப்பினும் பொருளளவில் இச்சுலோகக்கருத் திதுவாகவே அனைவர்க்கும் ஒப்பமுடியுமென்பது இது வரை வெளிவந்த எல்லா வான்மீக மொழிபெயர்ப்புக்களாலும் விசதமாகும். கம்பரின் மேற்கவியும் இச்சுலோகமும் சந்தர்ப்பத்தாலும், இடம் துறை இயைபுகளாலும் ஒரேபொருளுதலியவென்பது தெளியக்கிடக்கின்றது. தன்னைத்தேடிக் காடுபோந்த பரதன் பரிதாபமாற்றி, நாடவன தாமென் றவனைத் தேற்றுமிடத் திராமன்வாயெழுந்த திவ் விருகவிக் கூற்றும். முறையே முன் இராமன் கூறிப்போந்த பல நியாயங்களையும் ஒவ்வாத பரதன், இதுகேட்டதும், நாடு அறத்துறையிற் றன்னு தென்பதை மறுக்ககில்லனு யேற்பவனுகிறன். கம்பரைப்போலவே வான்மீகியும் இவ்விடத்திற் பிறப்பாற் பரதனுக்கே அரசுரிமையாக்கந் தருவதோர் தசரதன் மாபுடைமுன்சொல் உண்மையை இராமன்வாய்ப் பெய்தமைத்து வைத்துள்ளார். ஆனல், புதைபொருளாக விசாரித்தாய்

பவரறியும்படி கம்பர் விட்டுவைத்த அத்தொல்லறச்சொல்லின் இடம் பொருள் காலம் இயைபொடு பயன்களை யாவருமுணரும்வண்ணம் வான்மீகி விளக்கியுள்ளார்.

இச் சுலோகக்கருத்தை ஊன்றி விசாரிக்குமுன் நாம் தெளிந்து கொள்ளவேண்டியதொன்றுண்டு: 'கன்யா சுல்கம்' என்ற சொற்றொடரும் அதன்பொருளும் கவனிக்கவேண்டும். மனுவாதி வழக்கறநூற் பழக்கமுடைய வாதம்வல்லுநர்பலரும் இவ்*வறத் தொடர்புடைய சொற்றொடராக்கமும் பயனும் நன்கறிவர். †வழக்கிடை வழூக்கியுமிழுக் கப்படாத் தமிழர் இச்சொற்பொருள் கேட்டிருக்கக் காரணமில்லை. கன்னியொருத்தியை மணக்குங் காதலன், மணமகள் தன்னகம் விழைந்து வருமாறு, விரும்பித்தரும் பொருளே 'சுல்க' மெனப்படுவது. 'சீதனம்' எனும் பொதுப்பெயர்கொண்ட பெண்டிர் நிதிவகுப்பிலொன்றே 'சுல்க' மாகும். யாடக அயாடக சீதனம், சௌடயீகசீதனம், சுல்கசீதனம் எனச் சீதனம் பலதிறப்படும். பெண்டிர்க்குப் பெற்றோர், அவர் சுற்றத்தார், வேட்போர், அவரொக்கல், நட்பாளர் பலரும் மணங்கருதித் தருங் கொடைப்பொருளும், மணவினை கருதாமலே தாப்பெறும் திருவும், தந்தொடர்புடைச் சுற்றத்தார் இறந்தவரிடமிருந்திறங்கப் பெண்டிர் பெறுநிதியும், தம் தாளாண்மை முதலியவற்றாற் றையலார் தாமே யீட்டுந் தேட்டும், இன்னு மெனைத்துவகையானும் அவரடையு மெய்ப்பொருளும், வகைமுறையால் வெவ்வேறு பெயர்பெறினும், தொகைநிலையிற் 'சீதனம்' எனும் பொதுப்பெயர்க்குரியதாகும்; எனினும் 'சீதன' ஸ்திரீதனமெல்லாம், ஒருபடித்தாம் ஆட்சி அநுபவம் வாரிசுக்கிரமவீழ்ச்சி யுரிமைகளை யுடைத்தில்லை. யாடக சௌடயீக சீதனங்கள் அவையுடைய பெண்டிர்தமைக் கொண்டவர் கவர்ச்சிக்குட்படுவன. கொண்டவர்தேவைக்குட்பட்டுப் பெண்டிர்க் கவற்றிற் பாரதீனபாத்தியம் வரையறுக்கப்பட்டுளது. உடைய பெண்டிர்காலத்துக்குப்பின் அவற்றையடைதற்குரியார் வரிசைமுறையும் வேறுபடுவதாகும். நம தாராய்ச்சிக்கியைபுடைய 'சுல்கமோ' மகளிர்க்கு மணவாளர் மணக்குங்கால் விரும்பித்தரும் நிதியாம். இதிற் பெண்டிர் எல்லையிகந்த முற்றுரிமை யுடையராவர். வரம்பிறந்த நிறையாட்சி, கொடையுரிமை எல்லாம்

*அறம்—விதி (Law) சட்டம்.

†வழக்கு—இறைவரால் நிறுவப்பெறும் வழக்கறம் (Civil Law)-நீதி.

இதிற் பெண்டிர்க்கு உண்டு. உடையமடவார்க்குப்பின் அவர் மக்கள் அடைதற்கு உரியர். மக்க ளில்வழி அவர்கணவர் பெற்றோர்க்கின்றி, அவருடன்பிறந்த சோதரரே அவர் 'சுல்க' நிதியடைய முதலுரிமை யுடையர். இனைய ஆட்சி வீழ்ச்சி உரிமை விசேஷங்களுடைய சீதனமே 'சுல்க'மாகும்.

'தசரதசக்கிரவர்த்தி கைகேயியைத் தான் விரும்பி வேட்குங்கால், தன் அயோத்தியராச்சியத்தை அவளுக்குச் 'சுல்க'மாகத் தந்தனன்;' என்று வான்மீகியின் மேற்கவிதை தெரிவிக்கின்றது. பண்டைத் தமிழர்போலாது ஆரியருள் ஆடவர் மடந்தையரை மணமாடத்தன்றி முன்காணகில்லாராகவே, மணமகளான கைகேயிக்காக அவள் தந்தை யான கேகயமகாராஜனிடம் தசரதன் 'சுல்க'ப்பிரதிஜ்ஞைபண்ணித் தந்ததாக வான்மீகி விசதமாகக்கூறியுள்ளார். ஆகவே, ஆரியதர்ம சாஸ்திரக்கிரமப்படி, அயோத்தியரசு அன்றுமுதல் கைகேயியின் 'சுல்க' சீதனச்சொத்தாகி, அவளுக்காக அவள்கணவனால் ஆளப்பட்டதாக வேண்டுவதன்றி, தன்னிலையிற் றசரதனுக்கு அவ்வரசில் எவ்வித சுவாதீனமும் ஏற்படுமாறில்லை. கொடுக்குமுன் அவனுடைமையான அயோத்தியரசு, முற்றுடைமை யாட்சிமுறைக்கதிபனான தசரதனாற் கைகேயிக்கு அவளை அவன் மணக்குங்கால் 'சுல்கதிரவியமாக'ப் பிரதிஜ் ஞையுடன் பாத்தியப்படுத்திக் கொடுக்கப்பட்டுளது. அப்படிக் கொடு பட்டபின், அதிற் றசரதனுக்கு யாதொரு கொடையுரிமையுங் கிடை யாது. கைகேயிவயிற்றுதிக்குந் தநயனுக்கும், அவன் மைந்தருக்குமே, அவள்'சுல்க'நிதியாம் அவ்வரசு *வான்முறை †வழக்கால் உரிமையாகும். அவட்குச் சந்ததியற்றவழி, அயோத்தியரசு அவளுடன்பிறந்த யுதா ஜித்துராஜகுமாரனுக்குரித்தாமல்லால், கைகேயியின் தொடர்பற்ற தசரதகுலத்தாரெவருக்கும் ஆமாறில்லை.

"தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகைபானைப் பரதனெனும் பெயரானை"க்

கேகயர்கோன்மகள் பயந்தபிறகு பரதனும் அடுத்தகிரமவாரிசான யுதா ஜித்தும் உயிருடனிருக்க, அயோத்தியரசுக்குத் தசரதன் உடையவனு மில்லை; அதை யவன் கோசலைமகனான இராகவனுக்குக் கொடுக்கும் மெற்றியு மில்லை.

* வான்முறை=பழையநெறி-(Tradition). † வழக்கு=நீதி-சட்டம்-(Law).

வான்மீகி விதந்தோதிய 'சுல்க'க்கொடைச்சூளேயே மேற்கவி துலக்குவதாகும். அன்றி, முந்திய சுல்கப் பிரதிஜ்ஞையைக் குறியாது, தசரதன்பால் வரமாகப் பிந்திக் கைகேயி கேட்டுப் பெற்ற சொல்லேயே இக்கவி சுட்டுவதாகக்கொண்டால், "வரதன் ஆணையால் வையம் சரதம் நின்னதே" என்ற இராமன்சொல்லே யேற்கொணுதாய் வெறுத்த பரதன் தூயமனத்தை இணக்கும் நியாயம் பொதிந்திலதாகும்.

வான்மீகி விளங்கவைத்த இவ்வுண்மையையே கம்பர் தம் கவிகளிலும் அமைத்துள்ளார் என்பது இனி அக்கவிகளே ஊன்றிநோக்க விசதமாகும். கிளேகண்டுநீங்குபடலத் திராமன்வாய்க்கூற்றும் மேற்கவி வான்மீகியின் இக்கருத்தையே காட்டுவதாக் காண்பாம். "வானில் உந்தை உடைத்தரணி, (அவன் சுல்கப்பிரதிஜ்ஞைச்) சொல் மாபினல், நின்னதென் றியைந்த தன்மையால், (அதன்பிறகு) ஊனில் நீ பிறந்து (உனக்கு) உரிமையாதலால் (அவ்வயோத்தி) அரசு நின்னதே ; ஆள்க". என்று பரதனுக்கு இராமன், முனவரலாறும் அதன்வழி அரசு அவனதாதலும், விளங்கச் சொல்லிப் 'பசைந்தசிந்தைப் பரதனே'த் தேற்றினன. பரதனும் உண்மைதெளிந்து, அரசு அறத்துறையாற் றனதாவதறிந்து, அதனே அங்கீகரிக்கலாஞன்.

முன் நாம் நேர்பொருள் காணுது இடர்ப்பட்ட மந்தரைவாயெழுந்த கவிகளும் இனிச் செம்பாகமான தெளிபொருள்தரக் காண்போம். 'அறத்துறைபிறந்து பரதனுக்குரியநாட்டைத் தசரதன் அந்நியமாக இராமனுக்குத் தரவிரும்புந்தன்மையால், தந்தையும் பரதன்பாற் கொடுமையுடையன். இவ்வாறு பரதனுடைமையை அவனில்லாத போது அவன் அறியாமலே பிறர்க்காக்கமுயலுந் தயரதனேத் தடுக்காமற் கணவன்விருப்பே தன்கடனுக் கருதி இராமன்நன்மையையே எப்போதும் விரும்பின கைகேயி, பரதனுரிமைமறந்து, இராமன் அரசுபெறுவதையே விரும்புவதால், பரதனுக்குத் தாயும் தீங்கிழைப்பவளாவள். காத்தற்குரிய தன்னையீன்ற இருமுதுகுரவராலுமே தன்னுரிமை பாதுகாக்கப்படாமற் பறிக்கப்படும் பரதன்பரிதாபத்தை என் சொல்வேன்,' என்று அவன்பாற் பரிவுடைய "மந்தரை பரிந்து கரைந்து கூறு"ங் கவி இது:—

"அந்தரந் தீர்ந்துல களிக்கும் நீரினால்,
தந்தையுங் கொடியன் ; நற் றாயுந் தீயளால்:
எந்தையே! பரதனே!! என்செய்வாய்?" என்றாள் *

இனி, தசரதன்சுல்கச் சூளால் விவாககாலமுதற் கைகேயிக்கும், அவள் தநயனாய்ப்பிறந்தது முதற் பரதனுக்கும் அறமுறையால் அரசு உரியதாயிருக்கவும், அவ்வுண்மையறிந்த கோசலை அரசாக்கம் தன்மகனை அடையப் பெரிதும் அவாவுகின்றாள். முதுமையில் முதற்பிறந்த இராமன், பரதனைப்போற் பலகாலும் பிரியாம லிடையறாதுட னுறையத் தசரதனுக்கவன்பாற் காத லளவிறந்து வளர்வதாயிற்று. அறிவும் ஆற்றலுமுடைய கோசலை தன்விருப்பத்திற்கு அரசன்பெருங்காதல் அருந்துணையாவதுகண்டு, அதனைப் பேணிப் பெருக்கிப் பரதனுக்குரிய பூதலமெல்லாம் தன் மகனுக்கும் தனக்கும் உடைமையாமாறு தன் 'விரியுஞ் சிந்தை'யால் விழைந்து சூழ்கின்றாள். அவள் சூழ்ச்சியும் அரசன் மகவாசையும் சேர்ந்ததன்பலனாய்ப் பரதனில்லாதபோது இராமனுக்கு முடிசூட்டுவிழாக் குறிக்கப்படுகின்றது. இவ்வாறு பரதனுரிமையான அயோத்தியரசை அவனறியாது இராமனுடைமையாக்கித் தன் சூழ்ச்சியால் வாழ்க்கைபெற்றுமகிழும் கோசலையின் திறத்தை வியந்து, "வாழ்ந்தனள் கோசலை மதியினால்" என மந்தரைவாயாற் கூறியதனோடமையாது, இராமன் கோமுடிசூடும் நன்மாற்றத்தைக் கேட்ட கோசலை மகனைக்கண்கேட்ட ஈன்றாளேபோல உளமுவப்பதல்லாமல், அவ்வாக்கத்தைத் தன் மதியினாற் கூட்டுவித்த தன் ஆற்றலையும் நினைந்து அறிவால் இன்புற்றனள் என்பதைக் குறித்தே, கம்பர்,—கூனி,

"மாற்றமஃ துரைசெய மங்கை யுள்ளமும்
ஆற்றல்சால் கோசலை யறிவு மொத்ததால்"

எனத் தன்கூற்றாயும், "விரியுஞ் சிந்தனைக் கோசலை" எனக் கூனி கூற்றாயும் கூறிவைத்துள்ளார். 'உன்வயிற்றுதிக்கும் ஒரு மகற்கெனவே கொடுத்த பேரரசு இராமனன்ன உன் தொடர்பற்ற பிறர்க் காவதில்லை' எனும் மந்தரைமாற்றங் குறித்த கம்பர்கவிக்கருத்தை, இதே

---

*இக்கவிக்கருத்தோடொத்தபொருள், வான்மீகம், அயோத்யாகாண்டம், 8-வது சருக்கத்திலும் வற்புறுத்தப்படுகிறது. அரசுக்குரிய பரதனுரிமையைக் கேவலம் பக்ஷமிகையால் இராமனுக்குத் தசரதன் தரநினைப்பதாயும், அதைத் தடாமற் கைகேயியும் உண்மையுணராது மகிழ்வதாயும் மந்தரைவாயால் வான்மீகர் தந்திருக்கின்றார்.

சந்தர்ப்பத்தில் வான்மீகர் கூனிவாய்க்கொடுத்துள்ள வாக்கியமும் வலியுறுத்துகின்றது. "இராஜ்யத்தில் உரிமையுள்ள பாதரைக் கண்டு, நமக்கு அது கிடைக்குமோ மாட்டாதோ என்று அஞ்சும் இராமருடைய அச்சத்துக்கு நான் அஞ்சுகின்றேன்; ஏனெனிற் பயந்தவரிடத்தினின்றே பயமுண்டாவது இயல்பன்றோ?" என்று, இவ்விடத்தில் வான்மீகர் மந்தரைவாய்ப் பெய்து வைத்துள்ளார்.

வான்மீகர் விளங்கவைத்த உண்மையை இதனினும் விசதமாக்குவது, கூனியின் இறுதிக் கூற்றாய்த் தேவி தூயசிந்தையைத் திருப்பிய தான கம்பர்கவி. தசாதன் பாதனுடைமையைப் பறிக்க முயலவும் தடுத்தற்குரிய நீ தடாமற் பார்த்திருப்பதால், "கெடுத்தொழிந்தனை யுனக்கரும் புதல்வனை. கிளர்நீர் உடுத்தபாரகம் உடையவனுயிருந்த தசாதன், உன்வயிற்றிற்பிறக்கும் ஒருமகற்கெனவே, முன் 'சுல்க'மாகப் பிரதிஜ்ஞையுடன்கொடுத்த அயோத்திப் பேரரசு, உன் வயிற்றுதித்த பாதனு மொருமகனுக்கும், இருவழியும் பேரரசர்மரபின்வந்த உபய குலோத்துங்கனை அப்பாதன்குலக் கோமைந்தர்தமக்கும், அவனும் அவன்வழித்தோன்றினும் இல்வழி அடுத்த 'சுல்க'க்கிரமவாரிசான உன் தம்பி யுதாஜித்துக்கும் ஆவது அறமுறையாகும்: இவரல்லாப் பிறர்க்காவது அறமில்லை" என்று முன் 'சுல்க'ப்பிரதிஜ்ஞை வரலாற்றுண்மை யெடுத்துரைத்து, அதனைமறந்து வரன்முறைக்கிரமத்தில் இராமனுக்காம் அரசை அன்று அவனுக்குத் தசாதன் தாப்போவதாயெண்ணி அன்னுளைக்கத்தில் மகிழ்ந்தமங்கையை மந்தரை தெருட்டி, "பாதனுரிமையைப் பாதுகாத்து, அரசன் பிரதிஜ்ஞையையும் அறத்துறையையும் நிலைநிறுத்துங் கடன் நின்னதேயாகும்", என்று அவட்கு அறிவுறுத்துவாள்கூற்று இது:—

"கெடுத்தொ ழிந்தனை உனக்கரும் புதல்வனைக் கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன் ஒருமகற் கெனவே
கொடுத்த பேரரசு, அவன்குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கும் ஆம்: பிறர்க் காகுமோ? என்றாள்."

இப்பொருள் தெளியுங்கால், இக்கவியிற் சொற்களினமைவும், கூனி கைகேயி சம்வாதமுறை முன்பின் கதையொழுக்குக் கவிகளோடிதனியைபும் விசதமாவதோடு, வரலாற்றுமுறையும் கைகேயி கற்புடைக்

காதற்கடனாற்றுமியல்பும் இச் செம்பாகப்பொருளோடு இனிதியைவ தாகும். 'இராமனுக்குத் தரும் அரசாக்கம் பரதனுக் காமாறில்லை; அதனால் அவன் முடிசூடுதலைத் தடுக்க விரைதி' என்று கூனி கூறியதா முன் கொண்டபொருளுக்கு நாம் கண்ட இடர்ப்பாடொன்றும் ஈண் டிலதாவதோடு, பரதன்பாற் பரிவேனும் இராமன்பாற் பக்ஷக்குறைவேனு மின்றி நிறைகற்பினிலைத்த காதல்காரணமாகமட்டும் மந்தரை மாற்றம் மனங்கொளற்கிசைந்த தேவியின் தூயதன்மைக்கும் அவள் தெய்வக்கற்புக்கும் இதுவே பொருந்துவதாகும். சுல்கமாகக்கொடுத்த தசரதன் சொல்லால்மட்டும், சுல்கமாகப்பெற்ற தேவியின்வயிற்றுதித்த பரதனுக்கு அரசு அமைவதாகும். இராமனுக்கோ, தசரதன் கொடாம லே மூத்தவன் நிலைமையில் உரிமை சித்திக்கத்தக்கது. ஆகவே அவ னுக்குக்கொடுத்தபேரரசு என்பதிற் பொருத்தம் ஒன்றுமில்லை. பரதனுக்கு முன்'சுல்க'க்கொடையால்மட்டுமே அரசு உரியதாகும். அஃதில்வழி இளையனான பரதனுக்கு அரசு ஆமாறில்லை. மேலும், கொடுப்பவன் உடையனாயிருந்தாலன்றிக் கொடையால் உரிமைபடைய முடியாது. கைகேயிக்கு விவாககாலத்தில் அயோத்தியைத் தசரதன் 'சுல்க' மாகத் தத்தஞ்செய்தபோது அவனுக்கு அரசு தனி முற்றுரிமை. பிந்தித் தன் முதல்மைந்தனுக்கு அதைக் கொடுக்கவிரும்பினபோது தசரதனுக்கு நாட்டிற் சொந்தமெதுவு மில்லை; அதனால் அதை அவன் கொடுக்க அருகனுமல்லன். வான்மீகிவிளக்கிய 'சுல்க'ப் பிரதிஜ்ஞைச் சொல்லையும் அதன் அறப்பயனீடுகளையுமே மீண்டுக் குறிப்பதனால் மட்டும், இக்கவியிற் 'கெடுத்தொழிந்தனை'—'உடையவன்' 'ஒருமகற் கெனவே கொடுத்த'—'பேரரசு'—'அவன்குலக் கோமைந்தர் தமக்கும்'— 'அடுத்ததம்பிக்குமாம்'—'பிறர்க்காகுமோ' என்ற பலதொடர்களுக்கும் அவ்வவற்றிற் கியல்பும் இயைபுமான பொருள் கிடைக்கும்; அல்லாக் கால் இவையனைத்தும் பொருந்தா வெற்றுரைகளாய் முடியும். அதுவே போல் இவ்வுண்மைவரலாற்றின் குறியீடாக்கொண்டாலன்றி, 'வாழ்ந்த னள் கோசலை மதியினால்'—'விரியுஞ்சிந்தனைக் கோசலை'—'ஆற்றலால் கோசலை யறிவு மொத்ததால்'—'பரதனைக் கடிது போக்கியபொருளெனக் கின்றுபோந்தது'—'தந்தையும் கொடியன்'—'தாயும் தீயள்' என்ற பல கவித்தொடர்களும் பொருளின்றி நின்றுவற்றும்.

பகுதி—௪: கைகேயி கற்புக்கடனாற்றல்.

தன்னலவிருப்பாலேனும் தன்னொருமகன் ஆக்கத்தாசையாலேனு மன்று, கைகேயி இராமன் முடிசூடுதலைத் தடுக்கத்துணிந்தது. இந் நலங்களைச்சுட்டிக் கூனி முன்கூறியவனைத்தையும் உளங்கொளாது சீறிய உத்தமி, தான்நினையாத தசரதன் சுல்கப் பிரதிஜ்ஞையைக் கூனி வாய்க்கேட்டதும், பிறிதுபேசாது மனமழிந்து மாழ்கலாயினள். கொண்டவனன்றிக் கும்பிடத் தெய்வங்குறியாக் கோப்பெருந்தேவி, தசரதனைத் தலைநின்ற தனியறக்கடவுளாக் கொண்டொழுகுபவள். கழிபெருங்காதற்குரிய தன்கணவன் அழிவறம்பேணிப் பழிவினைசூழ்வ னெனக் கனவிலுங் கருதுகிற்றிலள். உயிரோவியமனைய இராமன்பா லளவிறந்த அன்பால் நாயகன் 'தீவினைநயந்து செய்வ' துணர்ந்ததும், தெய் வக்கற்பினள் தூயசிந்தை தெருமராலுற்றது. "அறனிழுக்கா தல்லவை நீக்கி, மறனிழுக்கா மானமுடைய" பேரரசன், 'காதன்மை கந்தா'க் கொண்டு, மகவாசையால் வஞ்சிக்கப்பட் டஞ்சுவதாம் அறம் துறந்து, "செய்தக்கவல்ல செய"த் துணிந்துநின்ற நிலையுணர்ந்ததும், நெஞ் சுடைந்து நினைவழிந் தயர்ந்தாள். 'பிறர்பழியுந் தன்பழியாப்' பேணி விலக்கும் 'நாணுக்குறைபதி'யான நங்கை, தன்னுயிர்க்குயிரான தச ரதன் தன்தொல்லைச் சொல்லறம் துறந்து பாவமும் பழியுந்தருஞ் செயலை ஆவலுறுவதாக அறிந்ததும், அவல மெய்தினள். "தாய்கை யில் வளர்ந்திலன்" தவத்தால் தான் வளர்த்துவந்த இராமனபிஷேகத்தி லழுக்காறற்றுவந்த கைகேயி, தன்தலைவன் மகன்பாற் காதலேதங் கைக்கொண்டு, அறவூக்கியம் போகவிட்டு, அறத்தோடு அன்புக்கிட னாய தன்னையும் வஞ்சிக்கத்துணிந்துநின்றசெயல்கேட் டுளமுளைந்து எளியளானாள். 'அரியகற் றாசற்ற' தன்கணவன்பாலும் 'வெளிறின்மை அரிதெ'னக்கருதா மனமாண்புடைய கைகேயி, அறம்பிறர்பாலுமோம்பு மரசன் தீமையைத் தானே செய்யுமாறு அவன் அறிவைச் சிதைத்துப் பேதைப்படுக்கு மிழவூழின் திறமறிந்து தியங்குவ தியல்பன்றோ? தெய்வ மெனத் தான்கொண்டுநின்ற கணவன் 'தீவினைநயப்பன்' எனக் கேட்டு, அவ் "வின்னல் (தன்) உள்ளத்தின் ஊன்ற, உணர்வுற்றிலள் ஒன்றும்". தசரதனின் இப்புதுநிலை அவள் செவ்விய மனத்தைக் கவ்விப் புண்படுத் தியது. இதுவரை கருதிலாப் புதுநிலை தன் கணவன்பாற் காண மாழ்கி மனமுடைந் திடைந்தாள். தன்னுள முறைந்த தலைவ னறவுருவப்படம்

அவன் மருட்கைச்செயலெழுப்பிய இருட்புகையுண்டுமாசுபடவும், மங்கை உயிரற்ற ஓவியம்போ லுணங்கிக் கோடிழந்த கொடியென்ன மறுக லானாள். தலைவன் தவற்றாற் றறியுண்டு தளர்ந்த உணர்வினள், பின் தன் அறவுளத்தறிவுதெருட்டத் தேர்வாள். மன்னறத்தையும் தன்னையும் வஞ்சித்து வேந்தன் மேற்கொண்டுநின்றசெயல் கண்கூடாக்கண்டபிறகு, மந்தரையை வைது பயனில்லையென் றுணர்ந்தாள். தன் நெஞ்சி லறநிலை தலைநின்ற காதற்கணவனின்வீழ்ச்சி காணப்பொறாது நைந் துளமயர்ந்த தேவி, உற்றது முறுவது மெண்ணித் தெளியலுற்றாள். தசரதன தனதெண்ணமுடித்து அறங்கொல்லும்பாவமும் தாரணியிற்பழியு மெய்தாமற் றடுத்தோம்பும் தன் காதற்கடனாற்று மறனும், அதுமுடிக் கும் வினையும், வினையாடல்நெறியு முறையுமே தன்மனத்தூன்றி வகை யறச் சூழ்ந்து தெளிந்து, செயத்தக்க தேர்ந்தெண்ணித் துணியலானாள். கற்புறழ்காதல் கவினுமுளக் கைகேயி, தன்கணவன் காதல்நிலையும், அதன் விளைவும், தன் கற்பறமும் சிந்தித்து, செய்வினை தேர்ந்து, தன் னறம்தழையு மறிவாற் றளர்ச்சிநீக்கி, வாளாவருந்தும் கையறவு களைந்து, அறத்துறையிற் றுளாண்மை மேற்கொள்வாளாயினள். தன் சோர்வும், தான்வளர்த்த காதற்றிருமகன் இராமனபாற் பரிவும், தன் கற்பறக்கடனாற்றுதற் கிடையுறச் சகியாள்; தன் காதற்கிழவன் பழி யொடு பாவமெய்தி அறங்கொன்றழிவதைத் தடுப்பதே தனனொருகட னாக் கருதிநிற்பாள். தசரதன்பா லன்பும், அவன்பழியில் நாணும், யார்மாட்டும் கண்ணோட்டமும், அறத்துறையில் ஒப்புரவும், எஞ்ஞான் றும் வாய்மையும் குன்றாக் குணக்குன்றான கைகேயி, "அனபு நாணொப் புரவு கண்ணோட்டம் வாய்மையோ டைந்துசால் பூன்றிய தூண்" ஆவளன்றோ? அதனால், தான் தேர்ந்து தெளிந்த அறக்கட னாற்றத் துணிகின்றாள்.

தான் வாளாவிருப்பின், தசரதன் இராமனுக்கு முடிசூட்டி அரசு தருவன். தரின், தன் கணவன் பாவமும் பழியும் எய்துவது உறுதி. அதனாற் றாழாது பிரதிஜ்ஞாபங்க தோஷத்தினின்றும் கொழுநனைக் காத்து, அவன்மூன் மரபுடைச்சொல்லையும் அறநெறியையும் ஓம்பல் அவன்பால் நிறைவளர்காதலுடைய தன் கற்பறக்கடனாக்கண்ட கைகேயி, அக்கடனாற்ற இராமாபிஷேகம் நடவாது இடைநின்று தடுப்பதன்றி வேறுவழிகாணாமையால், தானதனைத் தடுக்கத்துணிகின்றாள். துணிந்த

தும், செயன்முறைதெளிந்து, தன்காதற் றனிக்கிழவனான தசரதன்பாற் பழிவிலக்க அவனிடம் தான் முன்பெற்றுவைத்த வரங்களைமுன்னிட்டு, அரசை அவன் முன் மாபுடை யறச்சொல்லால் அதற்குப் பிறந்துரிய பாதனதாக்கவும், எனைத்தானும் அதற்குப் பங்கமேற்படாது காக்கவும், ஆவன தேர்ந்து, முடிவும் ஓர்ந்து, செயல்சீர்தூக்கி, வினைமேற்கொள் கின்றாள்.

அரசன் இராகவனுக்கு முடிசூட்டுவதாக அனைவருக்கும் அறி வித்துவிட்டான். உழைஞரும் குடிகளும் விழவுகாணக் குழுமியதோடு, தூய முனிவரும் நேயநிருபருமாய பலப்பலர் ஆண்டு வந்துற்றுளார். குறித்தபடி இராமன் கோமுடிசூடாமற் றடுப்பதை யறனுக்கண்ட கைகேயி இந்நிலையிற் செயத்தகுவது என்னை? உண்மையை வெளிப் படுத்திக் கணவன் சொல்லறம்பேணுவ தொன்று; அன்றிக் கையறவுபூண்டு தான் வாளாவிருப்ப தொன்று; இரண்டும் தேவி தூயசிந்தைக்கு உகந்தவன்றே. குறித்த திருநாளை வெறுநாளாக்கா விடின் தசரதன் பழியொடு பாவமேற்பது சரதமெனத் தெளிந்தபின், யாதுசெய்தும் அறந்திறம்பா தவனைநெறிநிறுத்தல் நிவிர்த்தியற்ற முதற்கடனுக் கொண்டாள். எனினும், உண்மைவெளிப்பாட்டுக்குத் தானுடம்படுவது, காக்கக்கருதியபழியைக் கணவனுக்குச்சேர்ப்பிக்கும் உறுதிவழியாமெனக் கண்டாள்; என்செய்வாள்? இராமன் முடி சூடில், தசரதன் சூளறங்கொன்ற பாவத்திற்கு ஆளாவன். அதைத் தடுக்கக்கருதி அவன் மாபுடை முன் 'சுல்க'ப் பிரதிஜ்ஞை அறச்சொல் லுண்மையை வெளிப்படுத்தின், இராமன் அபிஷேகமட்டும் நடவாதுநிற் கும்: ஆனால், 'தன் சொல்லறமறந்து நெறிதுறந்து முறையிறந்தான்' என்னும் பழியினின்றும் தசரதன் தப்புமாறில்லை. தன்மகனுக்கமே இராமாபிஷேகத்தை நிறுத்தத் தேவியைத்தூண்டியிருப்பின், ஒருகால் தான் முன்னைய 'சுல்க'ச்சூளும் அதனாற் பாதன் பிறப்புரிமைவரலாறும் கூறி அவனுக்கு அரசுபெற முயலக்கூடும். 'பாதன்பாற் பரிவுபற்றிக் கைகேயி அரசிரக்க நினைத்தாளல்லள்; நினைக்கவு மொல்லள்;' என்பதை மேல் அவள் குணநலங்குறித்த பல கவிகளால் ஆராய்ந்து தெளிந் துளோம். காதற்கிழவனைப் பாவமும் பழியும் அணுகாவாறு காத்த லொன்றே, அவள் கற்புறுசிந்தைக் காதற்கருத்து. உண்மை வெளிப் படின், முன்னாளின் மன்னவன் கேகயனிடம் அறச்சூள்செய்த தறியா

மாந்தர்பலரும், 'அம்மரபுடைச் சொல்லறந்துறந்து கழிபெருங்காதன் மிகையால் தன் முதன்மகனான இராமனுக்குத் தசரதன், தனக்குரிமை யில்லாது, பிறந்துரிய பரதனுக்குடைமையான தனியரசை, அவனை நாடகற்றி, அவனில்லாதபோது அளிக்கமுயன்றனன்', என்று அரசனைப் பழிப்பதற்கு இடனும். தாசாதி முடிசூடுவிழவைத் தான் தடாதவரை பாவமும், உண்மைசொல்லித் தடுப்பின் பழியும், தசரதனைச் சாருவதாகும். தன் கணவனுக்கு எவ்வகை யூறும் எவ்வமு மின்றிக் காப்பதையே காதனிறைக்கடனாக் கருதியுள்ள கைகேயி, இவ்விரண்டுக்கும் உடம்பட இசைகிலள். மன்னரும் மற்றைமக்களும் வந்து கூடியபின், என்னசொல்லி இராமாபிஷேகத்தைநிறுத்தித் தன்காதலன் புகழொடு சொல்லறமும் நிறுவலாகுமென்பதே அவள் மனங்கவர்ந்த கவற்சியாகும். தக்க நியாயங்கூறினன்றிக் குறித்துவைத்த முடிசூட்டு விழாவைத் தடுக்குமாறில்லை.

தசரதன்தவறு தக்கதோர் கழுவாய்* அல்லது பரித்தியாகம் பெறினன்றித் தீருவதன்று. பாவமெனைத்தேனும் அதற்குரிய வொறுப்பின்றிக் கழிவதில்லை. முதுமையில்முதற்பெற்ற மகவாசை மயக்கத் தன் சொல்லறந்துறந்த தசரதன்பாவத்துக்குப் பழி யவனையடையவேண்டும்; அன்றேல், அவற்கினியார்பலிபெற்று அவரையேனும் சாரவேண்டும். கணவனறத்தைப் பேணுவதிற் பழி அவனைச்சாராமல் தான் தாங்கக்கூடுமாயின், அதனினுங் கைகேயி காமுறுவ துலகிலில்லை. பொருகளத்தும் புரவலனைப்பிரிந் திருக்கச் சகியாது அவன் தேரிற் சாரதியாயமைந்து, தன்னுயிரு மவன்வெற்றிக்குச் சமயநேரிற் பலிகொடுக்க, மணந்த சிறுபருவத்தே துணிந்துநின்ற நிறைகாதல்நிறையுடையாள்; முன் வேட்டவன்வெற்றிக் குயிர்கொடுப்பாள், இன்றவனறப்பெற்றிக் குயிரினுமோம்பத்தகுந் தன் புகழை அவனலங்கருதித் தியாகிக்கத் துணிவது அவளறங்காழ்த்தநல் லியல்நீர்மையதன்றோ? "தம்மிற் றமக்கினியார் 'தாம்வீழ்வார்;' "எனவே தம் உண்மைக்காதலர்க் கூறுநீக்கி, அவர்நன்மைகருதி உயிரையும் உற்ற விடத் துயிரினினிய மானத்தையும் உதவுவதே நல்லறமாக்கொள்வா ருயர்வுள்ளார். அறமும் காதற்கிழவன்பால் அன்புமன்றிப் பிறிதறியா உள்ளமுடைய கைகேயி, தன் கணவனுக் கூறுதவிர்ப்பான், தன்புக

* கழுவாய்=பரிகாரம் அல்லது பிராயச்சித்தம்.

மைப் பரித்தியாகிக்கத் துணிவதில் விந்தையில்லையே? வேந்தன் விழவுகாணவழைக்க வந்தாரனைவருக்கும், இராகவன் நட்பினர்க்கும், அவ்விழாத் தடையுறத் தக்கதோர் சமாதானம் காட்டவேண்டும். மன்னவன் முன்னற மாபுடைச்சொல்லுண்மை வரலாறுகூறுவது போதிய சமாதானமாமேனும், அஃது அவன் பழிவளர்க்குஞ் செவிலியாகும். அவன் பழியஞ்சி யவ்வுண்மையை மறைப்பின், ஒன்று இராமன் முடிசூடித் தசரதன் தவறுடையனாகவேண்டும்; அன்றேல், அவ்விழவை நிறுத்திய பழி யொருவர் சுமக்கவேண்டும். பழிபரிப்பாரில்வழி மன்னவன் பாவந்தவிர்க்கும்வழி வேறில்லை. அதனால், தனக்கினிய தசரதன் புகழ் பரிக்க, அவன் படிறோம்பித் தானே பழிசுமக்கத் துணிந்தாள், அவன் கற்புறு காதன்மனையாள். சம்பரன்போரிற் புண்பட்டுக் களைத்து மயங்கிய தன்கணவனுயிரோம்பித் தன்னுயிரைப் பேணாது இரவனைத்தும் ஊக்கத்துடன் தேரில் அவன் இறவாமற் காத்தகாலைத் தசரதன் விரும்பித்தந்த வரமிரண்டையும், அவன்வழித்தன்றித் தனக்கெனஓர் நலம் அறிகிலாமையால், இதுவரை யுபயோகப்படுத்திலாதாள்; இன்று அவனறம்பேணுவதற்குரிய கருவிதுருவுவாள், அவ்வரங்களையே முன்னிட்டு, தன்புகழைப் பலியாக்கி, மனனற் கறத்தொடு புகழ்நிறுத்தக் கைகேயி துணிவதானாள். தன்னெண்ணத்திற் கிடைநின்று தடைசெய்வதற்குக் கைகேயியை வைது வெறுத்து றுத்த தசரதன், தன் பெருவெகுளிக்கிடையும், அவளைநோக்கி "நீ எப்பொழுதும் எனக்கு நன்மையையே விரும்பும் சுபாவமுடையவள்," ‡ "நீ இதற்கு முன் எனக்குக் கொஞ்சமாயினும் அயுக்தமாகவாவது அப்பிரியமாகவாவது செய்ததில்லை...... அப்படிச்செய்வாயென்று நான் இப்பொழுதும் நம்பவில்லை......நீ தர்மத்தை உல்லங்கனம்செய்யப் பயப்படுந்தன்மையள்," என்று பலமுறை யவளறவியல்சுட்டிப் புகழ்வதாக வான்மீகி கூறுகின்றார். அறஞ்சூழாது தன் மகவாசையால் தன்னை யொன்று பாவம் அன்றேற் பழிக்கிலக்காக்கி நின்ற மன்னனைப் பாவம்நீக்கிப் பழியும்விலக்கிப் பாதுகாக்கவிரும்பிய பெருந்தேவி, அவனாற் பிழைக்கப்பட்ட அறத்துக்குத் தன் புகழையே இரையாக்கத் துணிகின்றாள். புறவினுயிரோம்பத் தன்னுடலரிந்துதவிய மானவன்வழிப்பிறந்த மன்னன் அறமனையாள், தன்புருஷன் புகழோம்பத் தான் பழிசுமக்க அஞ்சுவளோ? இவ்வாறு மந்தமதிவீருப்

‡ ஸர்க்கம்-10.

பால் தசரதனெய்தவிருக்கும் பாவமும் பழியும் நீக்கி, அதனுற் றன்கற்பும் கணவனறத்தொடு 'புகழுங் காத்து, அவ னறஞ்சான்ற மரபுடைச் சொல்லும் ஓம்பத்துணிந்தவழி, பழிக்கும் அஞ்சித் தளராது நிறைக் கடனே நெஞ்சறிகரியாய் நெறியாற்றித் தன் பெண்மையறம்பேணுங் கைகேயி, "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற-சொற்காத்துச் சோர்விலாள் பெண்" என்னும் பொய்யில் புலவன் பொருளுரைக்கு முற்றுமுதலிலக்காக நிற்றற்குரியள்.

இவ்வாறு மன்னவன் முன்சொல்லறம் திறம்பாமற் காத்தலை மேற்கொண்ட மங்கையர்க்கரசி, பாவமொடு பழியும் அவனையணுகா வண்ணம் வினைசூழ்ந்து துணியலானாள். தொல்லைச் 'சுல்கப் பிரதிஜ்ஞை' வரலாற்றை யறவே தான் மறைக்கநினைத்தாள். தனக் கவன் முன் கொடுத்துவைத்த வரமிரந் திராமனபிஷேகத்தை நிறுத்துவதாற் கொடும்பழி தனக்கும், பெரும்புகழ் மன்னனுக்கும் வளர்வதோர்ந்தாள். "மகவாசையால், பேதை, பெற்றிநந்த வரங்கோலிப் பாதனுக் கரசிரந்தாள்; தந்த தன்சொல் மாற்றவாற்றுத் தகையாளன் தசரதனுகையால், அவள்கேட்டதை மறுக்க அஞ்சி, வண்மை எஞ்சாது வளர்த்து, வள்ளல் துஞ்சுவதானன்," என்று எவரும் அன்றுமுதற் பேசலானார். பெண்டிர் போரசி, பெண்ணறமோம்பித் தானே விரும்பிப் "பெரும்பழி தேடிக் கொண்டாள்." மன்னவன்புகழை மாசுபடுத்தும் இம் முன்வரலாற்றுண்மையை அவன்நலம்விரும்பி மறைக்கத்துணிந்த தேவி, தானே அவனிடம் வரமிரந்து, மகவாசையால் மதிமயங்கித் தசரதன் வரந்தரத் தாழ்த்தபோது அறங்கூறி வற்புறுத்திவாங்கலாயினள்.*
"அவனுக்கு உண்மையை அறிவுறுத்தித் தன்விருப்பத்தை எளிதில் முடித்திருக்கலாமே? அதைவிடுத்து, அவனிடமும் வாத்தை வியாஜமாக்கி, வாதித்து வாதைப்படுவானேன்?" என்று ஈண்டுச் சிலர் வினவுவது இயல்பு. அவளியல்புங் கொள்கையும் அவ்வாறு அவளைச் செய்யவிடா. அனைவருக்கும், உண்மையை மறைத்து, தன் ஒருமகன் பரதனுக்கு அரசுதரவிரும்பித் தானே வரமிரந்து மன்றுடி வாங்கினதாய் அறிவிக்கத் துணிந்தாள், வேந்தன்புகழோம்ப வேறுவழி காணுக் கற்பரசி. இப்படித் துணிந்தபிறகு தசரதனுக்குமட்டும் அவள் உண்மையைச் சொல்லுவானேன் ? சொன்னு லவன் செயலும் பின்விளைவும் என்னுமோ? தசரதன் அறப்புகழ்நலத்தையே விரும்புமவட்கு, அவ் விருப்பம் அரிதுமுடிவதாயின், அதற்கு அஞ்சிச் சோர்ந்து எளிதுவழி

* அயோத்தி-சருக்கம்-13.

தேடிப் பெண்ணறம் பிழைப்பளோ பெருந்தேவி. 'பரிந்தோம்பிக் காக்க'த் தகும் 'மனையறவொழுக்கத்தின் ஒல்'குவளோ உரவுடைய கைகேயி, "இழுக்கத்தி னேதம்படுபாக் கறிந்து" வைத்தும். மேலும், பரதனது ஆக்கமேனும் இராமன்கேடேனும் அவள் விரும்புவதாயினன்றே, அவள் அதை எளிதில்முடிக்க வழிதேடவேண்டும்? அதற்கு மாறாகக் கணவனைப் பிறரெவரும் சொல்லறம்பிறழ்ந்தானென வசைகூறப் பொறாது, அவன்பாற் காதலாற் பசைந்தசிந்தையள், தானே அவன்முன் அப்பழிதூறத் தருக்குவளோ? 'பிறர்தீமை சொல்லாநலத்ததே சால்'பன்றே? அச்சால்புடையாள், பிறர் அனைவருக்கும் தான் வரத்தை வற்புறுத்தி இராமாபிஷேகத்திற் கிடையூறிழைப்பதாய்த் தெரிவிக்கத்துணிந்தபின்னர், தன் கணவனிடம் அதனையொழித்து, அவ னுளமுளைந்து நாணொடு வெகுளியால் நலிந்து மாழ்க, வேறுகூறுவளோ? கூறுவதில், யார்க்கேனும் யாதேனும் "புரைதீர்ந்த நன்மைபயக்கும்" ஆக்கமும் அறமும் உண்டா? தூயசிந்தையள், தன் கற்பறக்காதலாற் கருதியதை முட்டின்றி முடிக்க நிறைகுறையா நேசமுறையால் தக்க வினைதேர்ந்த மெல்லியலாள், அறநெறியிற் சிந்தை காழ்த்துச் சோர்விலளாய்க் காதற்கற்பறமாற்றிய செவ்விகருதியன்றே, கம்பர், அவள் "தெரிந்து செயல்வகை"ச்செய்தி கூறும் பகுதிக்கு, அவள் 'சூழ்வினைப்படலம்' என்று பொருந்தப்பெயர் புனைந்துள்ளார்? செம்மாந்து செருக்கிய திமிருடைப்பெண்டிரின் தோசச் சிறுசெயலன்று, தெய்வக்கற்பினள் ஆழ்ந்து சூழ்ந்து தெளிந்து துணிந்த அறவினைகூறும் பகுதி, என்பதைத் தலைப்பெயராலேயே நம் கவியரசர் நன்கு அறிவித்துப்போந்தார்.

இனிக் கருணைக்கடலும் கற்பினுக்குறைபதியுமான கைகேயிக்குக் கணவன்புகழறமோம்புதலே கருத்தும், பரதனிடம்போலவே இராமனிடம் காதலும் உண்மையாயின், வரமெனவாங்கு மாசை இராமனுக்குத் தானேதந் துவக்கத் தசரதன் வேண்டியபோது விரைந்துதவ விரும்பாதிருந்ததேன்? எனில், கூறுவன். சிறந்தகுணப் பரதன் பிறந்துரியனாகலான், அவனுடைமையா மயோத்தியரசில் அவனறியா தவள் கொடையுரிமை மேற்கொள்வ தறமெனக் கருதகில்லள். கைகேயி தன்னிடம் நிலைத்த அன்புடையளாகவும், தனக் காசுதருமாசையால் வேந்தனைத் தூண்டி அவளே தன் அபிஷேகத்தை விரைவுபண்ணுவதாகவும் இராமன் சீதைக் குரைத்துள்ளதை* வான்மீகர்கூற அறிந்த

* சருக்கம்-16,

நாம், அவளை இராமனாக்கத்தி லழுக்காறுடையளாகக் கருதற் கிடனில்லை. அறத்திலூன்றிய அவ் வுளத்திறத்தையும் நன்கறிவோம். 'சுல்க'க் கொடைக்குமுன் தானுடைய தனியரசைத் தசரதன் விவாககாலத்தில் விரும்பி "மரபுடைச் சொல்லுடன்" தந்ததாலும், சுல்கச்சூளறமுறையாலும், பரதன் பிறந்ததும் அரசு அவனதாகிவிட்டதென்பதை, "வரனில் உந்தைசொன்மரபினாலுடைத், தரணி நின்னதென்றியைந்த தன்மையால், உரனில் நீபிறந் துரிமை யாதலால் அரசு நின்னதே யாள்க' எனக் கம்பரும், "நமது பிதா உன் மாதாமகரிடம் அவர்மகள்வயிற்றுப் பேரனுக்காமாறு அயோத்தியரசைப் பிரதிஜ்ஞையுடன் சுல்கமாகக்கொடுத்தார்; ஆனபடியால் நாடு உனதேயாகும்" என வான்மீகரும், பரதனுக்கு இராமன்வாயால் விளக்கியுள்ள விவரமு மறிவோம். கணவன்பாற் கழிபெருங் காதல்காரணமாய் அவன் விருப்பமே தன் அறமாக் கொண்டொழுகிய கைகேயி, தன்னலம்வேறுணராமையால், மணந்தபின் தனக்கு அவன் தந்த வரங்களை மறந்ததுபோலவே அதற்குமுன் நிகழ்ந்த "சுல்க" சம்பவத்தையும் மறந்திருந்தாள். மந்தரை சொல்லக்கேட்டபிறகே இவைகளினுண்மை யுணரலானாள். உரிய மகனை யூரகற்றிப் பிரிய மகனுக் குடைமையற்ற நாடளிக்கப் பரபரக்கும் தசரதன்றவறறிந் ததனைத் தடுக்கவிரும்புந் தகையணங்கு, தானுமத் தவறிழைக்கவிழைவதெங்ஙனமாகும்? அறம்புரத்தலன்றிப் பரதனே பட்டமெய்தி யிராமனுக்கரசில்லாதிருப்பதொன்றே அவள் விருப்பமன்று என்பதற்கு, பரதனில்லாதபோது தான் தரத் துணியாதவள் பிற கிராமனுக்குப் பரதன் தருவதைத் தடுக்காமையே தக்க சான்றாம். பரதனுக்குப் பிறப்பாற் பாத்தியமின்றித் தரணி தன் தனியுடைமையாகில், இராம னரசுபெறுவதை எனைத்தானும் தடுப்பதே அவள் திருவுளமாகில், கைகேயி பின் பரதன் இராமனுக்கு அரசு தருவதையும் தடுக்கமுயன்றிருப்பாளன்றோ? இராமனை யழைத்துவந்து முடிசூட்டவிரும்பிய பரதனுளக்கோள் அறிந்த தேவி, அதைத் தடுக்காம லவனுடன் இராமனையழைக்கச்சென்றதொன்றே அவள் மாசற்ற மனத்தூய்மையையும், இராமனாக்கத்தில் அவளுண்மையார்வத்தையும் இனிது விளக்குவதாகும். [தொடரும்.]

ச. சோ. பாரதி.

1925-ம் ஞூ டிசம்பர்மீ 23உ (குரோதன-ஞூ மார்கழிமீ 9உ) காலை $8\frac{1}{2}$ மணிக்குக் கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மகா-௱-௱-ஸ்ரீ: N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள் B.A., B.L. அக்கிராசனம்வகித்தவர்.
2. „ V. S. ராமஸ்வாமிசாஸ்திரியவர்கள் B.A., B.L.
3. „ ராவ்ஸாஹிப் M. மாணிக்கவாசகம்பிள்ளையவர்கள் B.A., B.L.
4. „ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I. 1925-ம் ஞூ எப்ரல்மீ முதல் நவம்பர்மீ முடிய உள்ள சங்கம் வரவு செலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக் கோரிய அடியிற்குறித்துள்ளவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

(1) மகா-௱-௱-ஸ்ரீ D. சுப்பிரமணியபிள்ளையவர்கள், தலைமைத் தமிழ்ப்பண்டிதர், St. Francis Xavier's College, பாளையங்கோட்டை.

(2) „ பண்டித. வ. சு. ராஜ ஐயனாரவர்கள், தமிழ்விரிவுரையாளர், பரமேசுவர காலேஜ், யாழ்ப்பாணம்.

(3) „ S. குமாரசுவாமியவர்கள், தாமரைக்கேணி, மட்டுக்களப்பு, சிலோன்.

(4) Rev. Herbert. A. Popley, B.A., Secretary, Y. M. C. A., Madura.

III. மதுரைத்தமிழ்ச்சங்கத்திற்குத் தேவையாயுள்ள மின்சாரவிளக்கு வகையாரா இவ்வளவென்பதைத் தெரிவிக்கவேண்டுமென்று மதுரை முனிசிபாலிடி Electrical Engineer எழுதிக்கேட்டுக்கொண்டிருக்கிற விஷய சம்பந்தமான ஆலோசனை அடுத்தமீட்டிங்கிற்குத் தள்ளிவைக்கலாயிற்று.

IV. 1925–1926-ம் வருஷத்திய சங்கம் வரவு செலவு மதிப்புத்திட்டம் (Budget) அடுத்தமீட்டிங்கிற்குத் தள்ளிவைக்கலாயிற்று.

மதுரை
23-12-1925.

N. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார்,
அக்கிராசனம்வகித்தவர்.

UNIVERSAL PRAYER.

*ஸர்வ ஜன ஜபம்

என்னும்

அனைவரும் வேண்டல்.

எவ்வெந் நாட்டினர், எவ்வெவ் வினத்தினர்,
எவ்வெம் †மதத்தின ரெனினும், ஆண் பெண்ணெனும்
இருபா லினர்க்கும் ஏற்ற பிரார்த்தனை.

நன்மையை நினைவார் நவில்வார் புரிவார்
நன்மையின் பயனை நண்ணச் செய்வதும்
தீமையை உன்னுவார் செப்புவார் செய்வசர்
தீமையின் பயனுறச் செய்வதும் எதுவோ,

---

*சம்பத்து ராயசயினரின் "எதிரிடைகள் இசைவுறுதல்" ('Confluence of opposites' by Champat Rai Jain) என்னும் நூலின் இறுதிப் பகுதியை அடிப்படையாகக்கொண்டு வேண்டிய வேறுபாடுகளுடன் இயற்றியது. (All Rights Reserved by the Author).

†உண்மையி னும்முய ரொருமத மும்மிலை:
அனைத்துண் மையினுக் களவில யாதலால்,
உண்மை அனைத்தும் உடைய மதம் இலை;
உண்மை ஒன்றும் உறுமத மும்மிலை;
எம்மதம் எவ்வள வுண்மையொ டியையுமோ,
அம்மதம் அவ்வள வுயர்வின தாமே.
மெய்யர் இவர், பொய் வேடத் தினர் இவர்,
என்ன, ஐயுற வின்றி அறியுமா,
றுள்ளத் துள்ளதை உணரவல் லார்க்கலால்,
மற்றவர் உண்மை மதம் அறி வரிதால்;
மனிதனை மதத்தால் மதியா தொழுக்கால்
மதித்தலே உண்மை மதிப்பா கும்மே.
[ஒழுக்கு-ஒழுக்கம்.]

[1]அதனை அகத்துள் அகலா தமைத்தே,
எண்ணுதல் இயம்புதல் இயற்றுத லென்னும்
மூச்செயல் களினும் முயல்வே னாக. (எ)

பசுக்கொலை செய்தப் பசுத்தோ லாற்செய்
செருப்பைத் தானம் செய்தல் போலத்,
தீய எவ் வகையினும் தேடிய பொருளாற்
செய்யும் எத் தன்மமும் திண்ணமா அதன்மமே:
அதனால்,
அறமுறை [2]திறம்பி அறம் செயே னாக;
அறநெறி [3]வழீஇப் பொருள் ஆக்கே னாக;
அறவழி யன்றி இன் படையே னாக.
என்றும்,
நல்லோர் இணக்கமே நான் இணங் கிடுக;
நல்லோர் நினைவே நான் நினைந் திடுக;
நல்லோர் நடையே நான் நடந் திடுக;
பிறர் நல் முறைகளைப் பேணி என் முறைகளா
ஆக்குதற் காசை அடைவே னாக. (கக)

உயிர்களை வருத்தல் ஒழிவே னாக;
உயிர்போ மெனினு மெய் உரைப்பே னாக;
களவினைக் கனவினும் கருதே னாக;
சூதா டெண்ணமும் [4]துறப்பே னாக;
மதியினை மயக்கிடும் மது முத லியவை
எதனையும் உட்கொளும் இழுக்கிலே னாக;
வாழ்க்கைத் துணைபா லன்றிமற் றவர்பாற்
காதல் உறுதல் [5]கடிவே னாக;
உயிரினும் மானம் [6]ஓம்புவே னாக;
இறப்பே னுயினும் இரவே னாக;
அயல்வர் பொருளினை [7]அவாவே னாக;

---

[1] பிரகிருதியென்னும் இயற்கை, நியதி, ஊழ், தருமசக்கரம், கடவுள் முதலியபொருள்களுள் அவரவர்கொள்கைக்கியைந்தபொருளைக் குறித்தது. [2] தவறி. [3] வழுவி-தவறி. [4] வெறுத்துவிடுவேன். [5] நீக்குவேன். [6] பாதுகாப்பேன். [7] விரும்பேன்.

அவர்கள்தம் வாழ்வுகண் [1]டழுக்கறே னாக;
அவர் செயும் நன்றியை [2]அயர்த்திடே னாக;
முன்பு பின் பவர்பழி மொழியே னாக;
எங்கணும் அவர் புகழ் இயம்புவே னாக.
அவர்குறை காண்டலிற் குருடனே னாக;
அவர் [3]மறை கேட்டலிற் செவிடனே னாக;
அவர்க் [4]கின்னா கூறலில் ஊமனே னாக;
அவர்க் [5]கூறு செய்தலில் முடவனே னாக;
அவர்கெடு சூழ்தலில் அறிவிலே னாக;
எனைக் கெடுத் தவர்க்கும் நன் றியற்றுவே னாக;
வைதவர் தம்மையும் வாழ்த்துவே னாக;
வெறுத்தவ ரெவரையும் விரும்புவே னாக;
[6]ஒறுத்தவ ருக்கும் உதவுவே னாக;
பகைவர்க்கும் அன்புசெய் பண்பினே னாக;
இத்தனை நல்லொழுக் கியைந்துளே மென்று
பெருமை பா ராட்டிடும் பிழையிலே னாக: (௫௧)

வாழ்வு வரின் இறு மாந்திடே னாக;
தாழ்வுறு மெனின் மனந் தளர்ந்திடே னாக;
செய்தற் குரிய சிறிய கடனையும்,
எய்தற் குரிய பயனை எண் ணாமல்,
அப்பயன் அடைந்திட ஆவாவுவார் யாரினும்
விருப்பொடு செய்திடும் [7]விழுமியே னாக:
என்னை எவரும் இகழினும் புகழினும்,
செல்வம் என்னைச் சேரினும் [8]தீரினும்,
இன்றே இறக்கினும் என்றும் இருக்கினும்,
எவ்வெவ் இன்பையும் எய்துதற் கெனினும்,
எவ்வெத் துன்பையும் [9]இரித்தற் கெனினும்,
உண்மை வழுவி ஒழுகே னாக: (௫௨)

---

[1] பொறாமை அடையேன். [2] மறவேன். [3] இரகசியம். [4] துன்பந் தருவன. [5] (அடித்தல் உதைத்தல்முதலிய) தீங்குகள். [6] வருத்தம் செய்தவர். [7] சிறப்புடையேன். [8] நீங்கினும். [9] ஓட்டுதற்கு.

"[1]உள்ளின் தன்மை உண்மை"யே ஆக,
"வாயின் தன்மை வாய்மை"யே ஆக,
"மெய்யின் தன்மை மெய்ம்மை"யே ஆக,
எண்ணம் சொல் செயல் யாவு மெய் ஆக,
உண்மையும் தோற்றமும் ஒன்றே ஆக,
ஒன்றையும் ஒளித்திடா துள்ளொடு புறம் ஒத்
தியற்று கா ரியமெலாம் இயற்றுவே னாக: (ருகூ)
எவ் வுயிர் துன்புறக் காணினும் இரங்கி
அவ்வுயிர்க் குதவி [2]ஆற்றுவே னாக;
[3]என் னுடை நன்மைபோல் யாவர் நன் மைக்கும்
உழைத்திட ஊக்கம் உடையே னாக;
என்வாழ் நாளெலாம் இடையறா தினிதே
பிறர்க்கு நன் றாற்றிப் பெற்றிடும் இன்பால்
என்மனம் நிறைவினை எய்துவ தாக: (சுகூ)

எனை இகழ் வலியரை [4]இறைஞ்சே னாக;
[5]ஆருயிர் போவதற் கஞ்சே னாக;
அவ்வுயிர் வாழ்வினை அருவரே னாக;
வஞ்சகர், தீயர், தீ வழியிற் பிறரால்
செலுத்திடப் பட்டவர் [6]திறத்தும் என்மனம்
கோபம் சிறிதும் கொள்ளா தாக;
இச்சிறு தன்மைய ரெவருட னேனும்,
எச் செய லெனினும் யான் இயற்றிட நேருமேல்,
என்மனம் அமைதியை இழந்திடா தாக: (எரு)
வருத்தம் என் மனத்தினை வருத்திடா தாக;
கடல்மலை வனம் இடு காடுகள் முதலா
வெருவிடு தனியிடம் மேவினே னாயினும்,
பாய்புலி பிடிக்கினும் பாம்பு கடிக்கினும்,
என் மனம் நடுக்கினை எய்திடா தாக;
அலையா உறுதியுற் றசைக்கவொண் ணேனாய்,
[7]வச்சிர வெற்பென [8]வற்பினை உற்று,

---

[1] மனத்தின். [2] செய்வேன். [3] என்னுடைய. [4] வணங்கேன். [5] அருமையான உயிர். [6] இடத்திலும். [7] வயிர. [8] உறுதியை.

விருப்புறு பொருள்கள் விட்டு விலகினும்,
வெறுப்புறு பொருள்கள் மேவிச் சேரினும்,
ஒழுக்கம் [1]வழுக்கா உளத்தே ளுக. (அரு)

ஓருயி ரும் துன் புற்றிடச் செய்யா
மூதன்மை அறம் புவி முழுதும் பரம்புக.
துன்பம் எவ் வுயிரையும் துன்று தொழிக.
பகையும் துயரும் பயமும் நீங்கி
எல்லா உயிர்களும் இன்பம் எய்துக.
அனைத்துயிர் களும் மன அமைதியை அடைக.
நன்மை எங் கெங்குமே நண்ணி ஓங் கிடுக.
தீமை எவ் வெவருமே செயவொணு தாக.
அறிவைப் பெருக்கலால், அருஞ்செயல் செயலால்,
பெறுதற் குரிய நற் பேறுக ளெல்லாம்,
யாவரும் எய்தி இன்புடன் வாழ்க. (கூசு)

தம் தாய் போற்ருய் இல்லை: தம் தாய்மொழி
எனத் தமக் காம்மொழி எம்மொழி யும் மில்லை
என்று தாய் மொழியை எவரும் பேணுக. (கூக)

உடற்றுன் புளத்துயர் உயிரைவிட் டொழிக.
பஞ்சமும் நோய்களும் பாரைவிட் டகல்க.
வேண்டிய பொழுதினில் வேண்டிய அளவில்
மிகாஅது குறையாது விண் மழை பொழிக.
ஆள்வார் முறைபிற ழாமே ஆள்க.
நீதி பதிகள் நெறியில் நின்று
பேத மின்றி நீதி செய்க.
பற்பல மக்கட் பகுதியும் பகைஅற்
றொற்றுமை உற்று நண் புடையாய் வாழ்க. (கoஅ)

கொலைகள வாதிய கொடுந்தொழி லல்லா
எந்தத் தொழிலும் இழிவில தென்றும்,
தொழில்புரி பவர்மனத் தூய்மைக் கியையத்
தொழிலதான் உயர்வினைத் துன்னிடு மென்றும்,

[1] தவருத.

அவரவர் தமக்கிசை வாம் தொழில் செய்தல்
அறமா மென்றும், திறமா நம்பிக்
கல்வித் துறையிலோ, கைத்தொழில் முறையிலோ,
எதனி லெனினும், இடைவிடா துழைத்துப்
பிறந்த நாடு பெருமை அடைடச்
சிறந்த செயல்கள் தம் திறமைக் கியன்றவா
றனைவரும் செய்குவா ராகி வாழ்க. (கககூ)

மண்முழு வதும் ஒரு மனையா, மண்வாழ்
மக்கட் டொகுதி அம் மனைவர் குடியாக்
குணிப்பரு நாடர் அக் குடியில்உள் ளாரா,
ஒருகுடி உள்ளவர் ஒருவரொ டொருவர்
சண்டைசெய் திடுதலைத் தவிர்த்திட லன்றி
அன்பொடு வாழ்தல் அறநெறி ஆதல்போல்,
ஒருநாட் டினர் மற் றொருநாட் டினரோ
டமர்புரி வதை ஒழித் தன்பராய் வாழ்தல்
அறநெறி யென அறிந் தடைக நல் வாழ்வே. (கஉஅ)

முற்றுப் பெற்றது.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

பிழை திருத்தம்.

செந்தமிழில் இவ்விருபத்துநான்காந்தொகுதியின் முதற்பகுதியில் க0-ம் பக்கம் கஉ-ம் வரியில் என் றேதமறவாத முறை என்றிருப்பதை என் றேதமற வாதமுறை எனவும், கஙு-ம் பக்கம் உஎ-ம் வரியில் வரு முகற்கெனவே என்றிருப்பதை ஒ நுமகற்கெனவே எனவும், ஷை பக்கம் ஙு0-ம் வரியில் யாதனவா. என்றிருப்பதை யாதனவாம். எனவும், இவ் விரண்டாம்பகுதியில் சுஎ-ம் பக்கம் உக-ம் வரியில் யார்மாட்டும் கண்ணோட்டமும் அறத்துறையில் ஒப்புரவும், என்றிருப்பதை யார் மாட்டும் ஒப்புரவும் அறத்துறைபிற் கண்ணோட்டமும் எனவும் திருத்திப் படித்துக்கொள்க.

உ

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

பாலகாண்டத் திருத்தக்குறிப்பு.

செந்தமிழ்.			இருக்கிறபடி.	திருத்தவேண்டியபடி.
தொகுதி	பக்கம்.	வரி.		
XXI	௨௬	௫	பெருமையுடைத்தாயிற்று.	பெருமையேயாம்;
,,	,,	௨௦	lost.	Lost.
,,	௨௭	௧௭	ரசமாய்	ரசமயமாய்
,,	௩௦	௧௧	கல்வி	கல்வி அறிவு
,,	௫௪	௨௪	கிருட்டினன்	கிருட்டிணன்
,,	௫௭	௫	நிர்மை யில்	நிர்கையில்
,,	௫௮	௨௩	என எனபதில் யாதுஎன்று	என்'' என்பதில் 'யாது' 'என்' என்று
,,	௫௯	௬	மடப்பிள்ளை	படப்பிள்ளை
,,	,,	௨௦	தோன்ற. மடம்	தோன்ற மடப்பிள்ளை என்ற பாடத்தில்
,,	௬௦	௧௧	(ஐம்பொரி) வழி	ஐம்பொறி (வழி
,,	௧௬௬	௧௧	தணிப்போமென்று	தணிப்போம்''என்று
,,	௧௭௦	௧௩	உணவுபொருள்	உணவுப் பொருள்
,,	,,	௧௩	உரவுதல்	உரவு-பாத்தல்
,,	௧௭௨	௨௦	நட்புக்கேட்படலம்	நட்புக்கோட்படலம்
,,	௧௭௬	௫	(யிலிருந்து)	(யிலிருந்து பால்)
,,	௧௭௭	௩	பெரு	பெறு
,,	௪௭௦	௨௦	பொறுப்பு	பொருப்பு
,,	௪௭௩	௩௦	(என்னை)	(என்னை எதற்காக)
,,	௪௭௪	௧	(எதற்காகவந்து	(வந்து
,,	௫௭௬	௬	பணி அரங்கம்	பணி அரங்கப்
,,	௫௭௭	௯	இவர்—கிர்த்தி	கீர்த்தி இவர்-கிர்த்தி
,,	௫௭௯	௪	கடப்	கடல்
,,	,,	௫	உருவல்	உருவ
,,	௫௮௨	௨௬	பவப்பயனை	தவப் பயனை
XXII	௨௯	௨	வாராமையாகிய	வாராமையாலாகிய
,,	௪௪௦	௨௮	நாம் மற்றெல்லா	நாம் அதனோடு மற்றெல்லா
,,	,,	௨௯	போல, வீர	போல், நவமணிகள் இழைத்த வீர
,,	௪௬௬	௯	நடம்	நட்பம்

XXI-ம் தொகுதி ௪௧௦-ம் பக்கத்தில் ௧௭-ம் வரியில் 'கூருமையை நோக்குக' என்பதன்பின் 'அன்றிப் பொன்னின் சோதி முதலியவை பொலிதல் போல்கின்ற கன்னியைக் கண்டுநின்றுரெனலுமாம்' என்பதையும், ஷை பக்கம் ௨௩-ம் வரியில் 'பொருள் கொள்க' என்பதன்பின் 'இயல்பாக இரண்டாம் அடியின் இறுதியில் நிற்றற்பாலதாகிய போலிவேபோல் என்பது செய்யுளாதலால், முதலடியின் இறுதியில் முறைபிறழ்ந்துநின்றது. பொன்னின்சோதி போதின்நாற்றம் தேனின்சுவை கவி(யின்) இன்பம் பொலிவு (—பொலிதல்)

போல் (கின்ற) கன்னி (யைக்) கண்டு நின்றூர் என முடிக்க. பெண்சாதி கொடுத்த தெய்வம் பிள்ளையுங் கொடுக்கும் என்பதிற்போலக் கன்னி என்பதன் பின் ஐயுருபு தொக்கது. இரணியன் வதைப்படலம் ௭௮-ம் பாட்டில் இன்னதோர் தன்மையன் இகழ்வுற்று என்பதில் தன்மையன் என்பதன்பின் ஐயுருபு தொக்கதுங் காண்க' என்பதையுஞ் சேர்த்துக்கொள்க.

ஷை தொகுதி ௪௯௯-ம் பக்கத்தில் 112-ம் பாட்டின் உரைமுடிவில் 'விரக தாபத்தால் அழகு மழுங்கியதை 'நலனும் பின்செல' என்றதனுற் குறிப்பித்தார்' என்பதைச் சேர்த்துக்கொள்க.

அயோத்தியாகாண்டத் திருத்தக் குறிப்பு.

"செந்தமிழ்"			இருக்கிறபடி.	திருத்தவேண்டியபடி.
தொகுதி	பக்கம்.	வரி.		
XXIII	௨௫	௧௨	உளன் என்ப	உளன் என்ப;
	,,	௧௭	இராக்கதரை அழித்து	இராக்கதரை அழித்து)
	௨௭	௨0	யானை	யா உள
	௨௮	௪0	(துணிவுடைய	(துணிவுடைய)
	,,	௨௨	'இமைத்தல் செய்வான்'	'இமைத்தல் செல்லான்'
	௩0	௨௪	அன்றெனின்,	அன்றெனின்
	௬௨	௨௬	நெகிழ்ந்த	நெகிழ்ந்த;
	,,	௨௭	அலர்ந்த	அலர்ந்த;
	௬௪	௨௪	என்றூன்.	என்றூன்.]
	௯௭	௧௯	(பிறக்கும்படி	(பிறக்கும்படி)
	,,	௨௮	களில் உள்ளவர்)	(களில் உள்ளவர்)
	௧௪௧	௪0	வசிட்டரை	வசிட்டனை
	௧௪௯	௧௨	வேண்டா	வேண்டே
	,,	௨௩	தவறிவிட்	தவறவிட
	௧௭௯	௧௫	(அரசச்) செல்வம்.	(அரசச்) செல்வம். எவன்-எப்படி. ("எவன் பல மொழிகுவம்". கலி. ௫.)
	௧௭௮	௩0	என்றூள்.	என்றூள்.]
	௨௫௪	௧௯	(வானம்) பந்தல்	(வானப்) பந்தல்
	௪௮௬	௨௨	கூறியிருப்பது இங்கே	கூறியிருப்பதனேடு இங்கே
		௨௯	கூறியதோடுசேர்த்துச் சிந்திக்கத்தக்கது.	கூறியதைச் சேர்த்துச் சிந்திப்பதனுல்விளங்கும்.
	,,	௨௪	இராமனைநோக்கி,]	இராமனை நோக்கி,
	௪௮௯	௧௨	(புறம்) நிலை-நீங்சல்	(புறம்); நிலை நீங்கல்
	௪௯௯	௨0	நீராகக் (கரைந்து	நீராக (க் கரைந்து

ஷ XXIII-ம் தொகுதி களஙு-ம் பக்கம் 229-ம் பாட்டின் உரைமுடிவில் அடியில் வருவதைச் சேர்த்துக்கொள்க.

மன்னன் என்பதற்கு அதன் பரியாய நாமமான 'வேந்தன்' என்னும் பெயருள்ள இந்திரன் என்றும், திருமாலைக் குறிக்கும் கடல்வண்ணன் என்பதற்கு அத் திருமாலின் அம்சமாய் இந்திரனுக்குத் தம்பியான உபேந்திரன் என்றும் பொருள்கொண்டு, அந்தத் தமயன் தம்பிகளுள், தமயனிருக்கத் தம்பியே இறைவனானதுபோல, மூத்த இராமனிருக்க இளைய பரதன் இறைவனாவதை எவ்வாறு விலக்கலாம்? என்ற பொருள், முந்திய உரையாசிரியர்களைப் பின்பற்றி மேலே கூறிய பொருளினும் சிறந்ததாகத் தோன்றுகின்றது.

வெ. ப. சுப்பிரமணியமுதலியார்.

ஸ்ரீ:

மதிப்புரை.

பண்டாரசாத்திரம்:—இதுவரை வெளிவராத இப்புத்தகம், சீகாழி ஸ்ரீமான் கி. சிதம்பரநாதமுதலியாரவர்கள் விருப்பத்திற்கிணங்கி, அவர்களின் இளையசகோதரராகிய ஸ்ரீமான் ச. சதாசிவமுதலியாரவர்களாற் பலபிரதிகளைக்கொண்டு செவ்விதின் ஆராய்ந்து அச்சிடப்பட்டிருக்கிறது. இதிலடங்கிய நூல்களும் அவற்றை இயற்றியோர்பெயர் முதலிய வரலாறுகளும் இதன் முகவுரையுள் விவரித் தெழுதப்பட்டுள்ளன. இந்நூல்கள் மெய்கண்டசாத்திரவுண்மைகளை விளக்குவன என்பதுபற்றிச் சென்னை நியாயகலாசாலைப் போசிரியர் ஸ்ரீமத். கா. சுப்பிரமணியபிள்ளை (எம். ஏ, எம். எல்., அட்வகேட்) அவர்கள் எழுதிய முன்னுரையால் இதிலுள்ள ஒவ்வொருநூலின் வரலாறும், அவற்றிற்சொல்லப்படும் விடயங்களும் நன்கு விளக்குவனவாம். இதற்கு மங்களூர் ஸமஸ்தான கலாசாலை உயிர்நூலாசிரியரான வித்வான் ஸ்ரீமத். ப. மு. சோமசுந்தரம் பிள்ளை (எம். ஏ., எல். டி.,) அவர்கள் தாமியற்றிய பிரகடனாசிரியர்

பெருமை யென்னும் இனிமையான பதிப்புரைப்பாடல்களால் அவர் களுக்குள்ள தமிழ்ப்புலமைத்திறமையும், சைவசமயவுணர்ச்சியும் நன்கு புலப்படுமாறு நூலியல்புகூறிப் பிரகடனுசிரியர்தம் கல்வியறிவொழுக்க முதலிய பெருந்தகைமைகளை வெளியிட்டிருப்பது பாராட்டத்தக்கது. இதன் விலை ரூபா இரண்டு. வேண்டுவோர்: மகா-௱-௱-ஸ்ரீ சிதம்பர முதலியார் அவர்கள், பென்ஷன் ஸப்ரிஜிஸ்ட்ரார், வடக்குவீதி, சீகாழி என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

ஸ்ரீவைஷ்ணவன்:— இது, வைஷ்ணவ சமய சம்பிரதாயங்களை யும், அவற்றின் சார்பான பிறவற்றையும் நன்கு வெளியிடக்கருதி நிகழும் ஒரு மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை. இதன் பத்திராதிபர் ஸ்ரீமத் டி. ஆர். பெரியநம்பியாபிள்ளையவர்கள். இதன் முதலிரண்டுபகுதிகள் வெளிவந்துள்ளன. அவற்றிலுள்ள விஷயங்கள் யாவரும் விரும்பிப் படித்துணருமாறு தெளிவான தமிழ்நடையில் நன்கு யெழுதப்பட்டிருக் கின்றன. இப்பத்திரிகையின் நோக்கமும் இதில் வெளிவரும் விஷயங் களும் இவையென இதன் விரிவான முகவுரையால் வெளியிடப்பட்டுள் ளன. இதில், படிப்பவர்களுக்குச் சமயவுணர்ச்சியோடு தமிழுணர்ச்சி யும் நன்குயுண்டாகும்படி, இடையிடையே மேற்கோளாகச் சில பாசுரங் களும் நீதிவாக்கியங்களும் வேண்டிய அளவு சேர்க்கப்படுகின்றன. எளி யோர்களும் வாங்கிப் படிக்கும்படி இதற்குக் குறைந்த சந்தா ஏற்பட் டிருக்கிறது. இதன் வருடச்சந்தா: உள்நாடுகளுக்கு ரூபா ஒன்று. வெளிநாடுகளுக்கு ரூபாய் 1—4—0. தனிப்பிரதி அணு இரண்டு. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். வேண்டுவோர்: ஸ்ரீவைஷ்ணவன் பத்தி ராதிபர், 84. தெற்குப்புதுத்தெரு, திருநெல்வேலி என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறலாம்.

லாங்மன்ஸ் தமிழிலக்கணம் (முதலாவது புத்தகம்):— இது, கும்பகோணம் கெவர்ன்மெண்டுகாலேஜ் ரிட்டையர்டு தலைமைத்தமிழ்ப்

பண்டிதரும் தமிழ் மகாபாரதப்பதிப்பாசிரியரு மான ஸ்ரீமத். ம. வீ. இராமாநுஜாசார்யரவர்களால், சிறுவர்களுக்குத் தமிழிலக்கணவுணர்ச்சி எளிதிலுண்டாகும்படி தெளிவாகப் பொருள்தோன்றும் சிறியவாக்கியங்களா யெழுதப்பட்டிருப்பதோடு உதாரணங்களும் பயிற்சிமுறைகளுங் காட்டப்பட்டிருக்கின்றன. இதன்விலை அணு $2\frac{1}{2}$.

லாங்மன்ஸ் தமிழிலக்கணம். (இரண்டாவது புத்தகம்,:— இதுவும், ஷை கும்பகோணம்காலேஜ் ரிட்டயர்டு தமிழ்ப்பண்டிதரும், தமிழ் மகாபாரதப்பதிப்பாசிரியருமான ஸ்ரீமத். ம. வீ. இராமாநுஜாசார்யரவர்களால், நடுத்தரவகுப்புமாணவர்களுக்குத்தக்கவாறு வேண்டியவளவில் இலக்கணவிதிகளை முறைப்படுத்தி எளிதிற்பயின்றுகொள்ளும்படி தெளிவானநடையி லெழுதி உதாரணங்களாலும், குறிப்புக்களாலும், பயிற்சிமுறைகளாலும், அநுபந்தத்தாலும் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. நடுத்தரவகுப்புமாணவர்களுக்குமட்டுமேயன்றித் தமிழ்கற்போரெல்லோருக்குமே இப்புத்தகம் மிகப் பயன்படத்தக்கது. இதன் விலை அணு 6. வேண்டுவோர் லாங்மன்ஸ் க்ரீன் கம்பெனி, 167 மவுண்டு ரோடு, சென்னை என்ற விலாசத்திற் பெறலாம்.

புலோலிப் பசுபதீசர் பதிற்றுப்பத்தந்தாதி:—இது, புலோலி நகர் வாழும் பண்டிதை ஸ்ரீமதி பத்மாஸனியம்மாளால் அவ்வூர்ப் பசுபதீசுவரர்மீது தோத்திரமாலையாகப் பாடப்பட்ட நூறு பாட்டுக்களையுடையது. பாட்டுக்களெல்லாம் சாந்தச்சுவையும் தெளிவு முடையனவாயுள்ளன. இதன் விலை சதம் 25. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

விவேகானந்தன்:— இது, ஆத்துமஞானத்தாலும், உலகியலறிவாலும், தமிழ்மக்கள் உயர்வடையும்பொருட்டுக் கொழும்புமாநகரிலுள்ள விவேகானந்த சபையோரால் வெளியிடப்படும் மாதாந்தத்தமிழ்ப் பத்திரிகை. இதன் ஆசிரியர் ஸ்ரீமத்: விபுலாநந்தஸ்வாமிகளென்று

தெரிகிறது. இவர்கள் தமிழ் ஆங்கிலம் என்னும் இருமொழிகளிலும் உயர்தாக்கல்விகற்றுத் தேர்ச்சிபெற்று, வடமொழியும் பயின்ற பேரறிவுடையாராயிருத்தலால் அவர்களால் நடத்தப்படும் இப்பத்திரிகை உலகிற்கு மிகுதியும் பயனளிக்குமென்றெண்ணுகிறேன். இதன் வருடச் சந்தா ரூபா. 1 சதம் 50. வேண்டுவோர், காரியகர்த்தர், விவேகானந்தன், கொழும்பு என்னும் விலாசத்துக்கு முன்பணமனுப்பினுற் பெறலாம்.

௨

சைவசமயத்தைச்சார்ந்த ஓர் உலாநூல்.

கம்ப-ராமாயணம் என்னும் காவிய-அருங்கலம் இன்றளவும் தக்க அறிஞர்களால் திருத்தமுறப் பதிப்பிக்கப் படவில்லை என்பது யாவரும் அறிந்ததொன்றேயாம். தமிழ்-மொழிக்கு என்றும் அழியாப் பெரும் புகழ் தந்து விளங்கும் இம் மகா காவ்யத்தைப் பிழை நிரம்பிச் சீர்குலைந்தவடிவத்திற் கண்கொண்டுகண்டும், பொறைகூர்ந்து அமைதியில் ஆழ்ந்திருக்கின்ற தமிழ்-உலகின் மனப்பான்மை பெரிதும் இரங்கத்தக்கதே. ஏடெழுதுவோரும் மதாபிமானம் தலைக்கேறியவர்களும் போலிக் கவிவாணர்களும் நெடுங்காலம் ஒருங்குகூடிக் கம்பரது காவியப்பூங்கோயிலைப் பாழ்படுத்த முயன்றும் அதன் பேரழகு முக்கியாம்சங்களிற் குன்றாமலிருப்பதே ஒப்பற்ற அதன் பெருஞ்சிறப்பினை நன்கு காட்டவல்லதாகும். தமிழ்-மகட்குச் சிரோ-பூஷணம் என்று சொல்லத்தக்க இவ் இதிஹாஸ-ரத்தினத்தை அதற்குரிய இயற்கை நல்லொளியுடனும் பேரழகுடனும் தமிழ்-மக்கள் விரைவிற் கண்டு களிக்குமாறு இறைவன் திருவருள்புரிவாராக. நிற்க.

இராமாயண—ஏடுகளிற் காணப்படும் பாடபேதங்களை என் வச முள்ள அச்சுப்பிரதியிற் குறித்துக்கொள்ளுமாறு பல இடங்களி லிருந்தும் ஏட்டுப்பிரதிகள் சம்பாதித்துக்கொண்டுவருகின்றேன். திருவனந்தபுரம் அரண்மனை—நூல்-நிலயத்திற்கு அதிகாரிகளின் உத் தரவுபெற்றுச் சென்று ஆங்குள்ள தமிழ்—ஏட்டுப் பிரதிகளைப் பரி சோதித்தேன். அங்கே இரண்டு இராமாயணப்பிரதிகள் உள்ளன. இவற்றுள், ஒன்றன் தலைச்சீட்டில் '197 மகுடவாதம்: தமிழ்ப்பாட்டு: ஜீர்ணம்' என்று எழுதப்பெற்றிருக்கிறது. பாலகாண்டத்திலே பெரும்பகுதியும் உயுத்தகாண்டத்திலே முதற்போர்ப்படலம் முதல் பிரமாத்திரப்படலம் 208-வது செய்யுள்வரையும் இதன்கட் காணப்படு கின்றன. 'முதற்போர்ப்படலம்' என்பதற்கு மாறாக 'மகுடபங்கம்: முதனாளையுத்தம்' எனப் படலப்பெயர் தரப்பட்டுளது. மகுடபங்கம் என்றதனையே 'மகுடவாதம்' என வாசித்து அதனை நூற்பெயராகக் கொண்டு தலைச்சீட்டில் வரைந்துள்ளார்கள்போலும். இரண்டாவது ஏட்டுப்பிரதியின் தலைச்சீட்டில் '22 ராமாயணம்: தமிழ்ப் பாட்டு: சோரப்படலம் முதல் மூக்ஷிப்படலம் வரை' என்று எழுதப்பெற்றுளது. இப்படலங்கள் முறையே 'இராவணன் சோகப்படலம்' என்பதனையும் மீட்சிப்படலம்' என்பதனையும் குறிப்பனவாகும்.

முதலாவது ஏட்டுப்பிரதியின் இறுதியில் யாப்பருங்கலக்காரிகை முதலிய நூற்பகுதிகளும் விரவியுள்ளன. இங்ஙனம் விரவியுள்ள நூலொன்றைப்பற்றியே யான் ஈண்டு எழுத விரும்புவது. இரண்டு இதழ்களே அந்நூலுக்குரியனவாயிருக்கின்றன. அவ்விதழ்களிற் காணப்படுவன வருமாறு:—

......................பின்னொருத்தி
மூவர் தமதர மூத்தமிழின் தொல்பயனுந்
தேவர் பரவுந் திருவெழு................ரவு

மருவலருந் தண்சோலை வாதவூ ரெந்தை
திருவியலும் போல்வாள் தெரிவை—யருமறைதேர்
மன்றுக் குரியபிள்ளை மாணிக்கக் கேயூரக்
குன்றுக் கெணவளர்ந்த கொங்கையாள்—கொன்றை
யலங்கல் புனையு மதிரேக மார்பிற்
கலந்து துயி.......கண்ணாள்—நிலம்புனல்கால்
ஈட்டும் புவன விருவிசும்பை யேறுகத்
தீட்டும் படிநினைந்த செங்கையாண்—மூட்டுமிகல்
அந்திப் பிறைநிலவை யாரும லாளுடையான்
உந்தித் தடம்படிந்த வுள்ளத்தாள்—பைந்தடத்து
வாச மலரணைந்த மந்தா நிலக்களிறு
பூசவிடு மந்தண் பொழிலிடத்துக்—காசினியில்
விண்ணுங் குனிவிக்கும் வெண்டாள வேதிகைமேல்
எண்ணின் கலைமாதென விருந்து—கண்ணுதலை
யாதரித்த நானொருத்தி பெற்றமத மல்லாது
மாதருக்குப் பார்மீது வாய்க்குமோ—ஆதலாற்
கண்ணிணையுந் தோளுங் கனகொங் கையும்நுதலும்
வண்ணநறுங் கொன்றை வனமானேன்.

இங்கே தந்துள்ள பகுதியை வாசித்து நோக்கிய அளவில் இந்நூல் சொல்வளஞ்சிறந்த ஓர் உலா-நூல் என்பதும், அது சைவசமயத்திற் குரியது என்பதும் யாவர்க்கும் தெளிவாய் விளங்கக்கூடியது. இவ்வுலாவைக் குறித்துத் தமிழ்—ஆராய்ச்சியில்வல்ல அறிஞர்கள் ஏதாவது உணர்த்தக்கூடுமாயின், தமிழும் சைவமும் அவர்கள்பால் மிக்க நன்றியுடையதாகும்.

S. வையாபுரிப்பிள்ளை.